இன்றைய வேளாண் செய்திகள்

21.10.2012 P.M

22.10.2012 A.M

## கடலூரில் 170 மி.மீ. மழை; பயிர்கள் நீரில் மூழ்கின




கடலூரில் மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாக நீடித்து வந்த மழை ஞாயிற்றுக்கிழமை பகலில் ஓய்ந்திருந்தது. சனிக்கிழமை காலை 8 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை மாவட்டத்தில் அதிகபட்சமாக கடலூரில் 170 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. இதனால், மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

வடகிழக்குப் பருவ மழையின் தீவிரம், கடலூரில் சனிக்கிழமை பகல் முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை இருந்தது. இந்த இடைப்பட்ட 24 மணி நேரத்தில், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கனமழை கொட்டித்தீர்த்தது.

கடலூர் மாவட்டத்தில் சனிக்கிழமை காலை 8 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழையளவில், கடலூரில் மட்டும் 170 மி.மீ. மழை பதிவாகியிருக்கிறது. மொத்தம் 1,218 மி.மீ. மழையும், சராசரியாக 61 மி.மீ. மழையும் பதிவாகியது. மற்ற பகுதிகளில் பதிவான மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்):

கொத்தவாச்சேரி 143, பரங்கிப்பேட்டை 91, சிதம்பரம் 87.80, புவனகிரி 86, பண்ருட்டி 68, லால்பேட்டை 62, சேத்தியாத்தோப்பு 57, வேப்பூர் 57, காட்டுமன்னார்கோவில் 53,

அண்ணாமலைநகர் 52, விருத்தாசலம் 52, காட்டுமைலூர் 52, குப்பநத்தம் 45, மேமாத்தூர் 31, கீழ்செருவாய் 28, பெலாந்துறை 27, ஸ்ரீமுஷ்ணம் 25, தொழுதூர் 19, லக்கூர் 12.

இதனால் கடலூர் மாவட்டத்தில் பிரதான ஏரிகளான வீராணம் ஏரி, பெருமாள் ஏரி, வெலிங்டன் ஏரி, வாலாஜா ஏரிகளில் நீர்வரத்து அதிகம் இருந்தது. 3,505 ஏரிகள், குளங்கள் அனைத்தும் வேகமாக நிரம்பி வருகின்றன.

அணை, ஏரிகளில் நீர்மட்டம் (அடைப்புக்குறிக்குள் அதன் முழு கொள்ளளவு): வீராணம் - 44.7 அடி (47.5 அடி), வாலாஜா ஏரி - 4.10 (5.5), பெருமாள் ஏரி - 5.8 (6.5), வெலிங்கடன் ஏரி - 10 (27.4), கோமுகி அணை - 40.50 (46), மணிமுத்தாறு அணை - 19.5 (36), சாத்தனூர் அணை 78.4 (90), கீழணை - 8.2 (9).

பொதுப்பணித்துறை ஏரிகளில் விருத்தாசலத்தில் 197 ஏரிகள் உள்ளன. இதில் 55 ஏரிகள் 50 விழுக்காடும், 150 ஏரிகள் 50 விழுக்காட்டுக்குக்கீழும் நிரம்பியுள்ளன. சிதம்பரம் பகுதியில் மொத்தம் உள்ள 18 ஏரிகளில் ஒன்று 75 விழுக்காடும், ஒரு ஏரி 50 விழுக்காடும், 16 ஏரிகள் 50 விழுக்காட்டுக்குக் கீழும் நீர் தேங்கியுள்ளன.

கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், குறிஞ்சிபாடி, காட்டுமன்னார்கோவில், வடலூர், பண்ருட்டி, சேத்தியாத்தோப்பு உள்ளிட்ட பல பகுதிகளில் கிராமங்களில் வெள்ள நீர் சூழ்ந்தது. பல கிராமங்களில் வெள்ள நீர் சூழ்ந்து, பாதைகள் துண்டிக்கப்பட்டன. பெரிய கங்கணாங்குப்பம் பகுதியில் நீரில் நெற்பயிர்கள் மூழ்கின. கடலூர் கெடிலம், பெண்ணை ஆறுகளில் நீர்வரத்து அதிகமிருந்தது. இதனால், வெள்ள

நீர் கரைபுரண்டு ஓடுகிறது.

இதில், கடலூர் நகரில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மழை ஓய்ந்து, வெயில் அடித்தது. இதனால், நகர்ப் பகுதிகளில் தேங்கியிருந்த மழை நீர் வடியத் தொடங்கியது.


மழைக்கால நோய்: கனமழையால், அரசு மருத்துவனைகளுக்கு வரும் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அதிகமானோர் கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற வந்தனர்.

மீனவர்கள் 3-வது நாளாக கடலுக்குச் செல்லவில்லை: கடலூர் மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாகப் பெய்து வந்த தொடர் மழையால், கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. இதனால் மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை. மேலும், ஆற்றிலிருந்து கடலுக்கு வெளியேறும்

நீரின் வேகம் அதிகம் இருந்ததால், மீனவர்கள் 3-வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் படகுகள் அனைத்தும் முதுநகர் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

21th oct 2012 P.M

**வயல்களில் தேங்கும் மழைநீர் நெற்பயிர் பாதிக்கும் அபாயம்**



காரைக்காலில் விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்குவது தொடர்ந்தால், நெற்பயிர் பாதிக்கும் அபாயம் உள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

காரைக்காலில் நேரடி நெல் விதைப்பு மூலமும், சம்பா பயிராகவும் சுமார் 2 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. முறைப்பாசனம் மூலமும், பருவமழையாலும் காரைக்காலுக்கு தமிழகப் பகுதியிலிருந்து தண்ணீர் அதிகமாக வருகிறது. இது தாழ்வான சில வேளாண் நிலங்களில் புகுந்து வருகிறது. வயல் ஓரத்தில் உள்ள வாய்க்காலிலும் முழுமையாக தண்ணீர் செல்வதால், வயலில் தேங்கியுள்ள தண்ணீர் வடிய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் சனிக்கிழமை கூறியது: காரைக்காலில் கடந்த 12-ம் தேதி வரை நேரடி நெல் விதைப்பு 1600 ஹெக்டேர் நடைபெற்றுள்ளது. 10 ஹெக்டேரில் தாளடி சாகுபடி உள்ளது. இதில் குறைந்தகால பயிரான ஆடுதுறை 47, 48 மற்றும் வெள்ளைப் பொன்னி ரகங்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

இதுதவிர, அம்பகரத்தூர், திருநள்ளாறில் செல்லூர், சேத்தூர், பண்டாரவாடை மற்றும் நெடுங்காடு பகுதிகளில் சம்பா பயிராக விவசாயிகள் 135 ஹெக்டேரும், தாளடியாக 148 ஹெக்டேரும் நடவு செய்துள்ளனர்.

மழையால் இவை பாதிப்படையவில்லை. இருப்பினும், தொடர்ந்து மழை பெய்யும்போது திங்கள்கிழமை முதல் பயிரிடப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்யும் பணியை தொடங்கவுள்ளோம் என்றார்

## மாட்டு வண்டிகள் வாங்குவதற்கு மானிய விலையில் கடனுதவி வழங்கக் கோரிக்கை

புதுச்சேரியில் மாட்டு வண்டிகள் வாங்குவதற்கு மானிய விலையில் கடனுதவிகள் வழங்க வேண்டும் என்று புதுச்சேரி மாநில மாட்டு வண்டித் தொழிலாளர் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏஐடியூசி சார்பில் புதுச்சேரி மாநில மாட்டு வண்டித் தொழிலாளர்கள் நலச் சங்க மாநிலப் பேரவைக் கூட்டம் வில்லியனூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்துக்கு கே.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். ஏஐடியூசி மாநில பொதுச்செயலர் வி.எஸ்.அபிஷேகம் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசினார்.

சங்கத்தின் கெப்ரவத் தலைவர் ஐ.தினேஷ் பொன்னையா, மாநிலத் தலைவர் கே.சேதுசெல்வம், மாநிலச் செயலர் கே.கருணாகரன், மாநிலப் பொருளர் கே.சுப்ரமணியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இக் கூட்டத்தில், புதுச்சேரிக்குள்பட்ட ஆற்றுப் படுகையில் மாட்டு வண்டியில் மணல் அள்ளுவதற்கு கட்டணம் நிர்ணயித்து அனுமதி வழங்க வேண்டும்.

புதிய மாட்டு வண்டிகள் வாங்குவதற்கு மானிய விலையில் கடனுதவிகள் வழங்க வேண்டும்.

கால்நடைத் துறையின் மூலம் மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகரப் பகுதியில் மாட்டு வண்டி நிறுத்தி மணல் வியாபாரம் செய்ய அரசு இடம் ஒதுக்கித் தர வேண்டும்.

கால்நடைத் துறையின் மூலம் கிராமப் பகுதிகளுக்குச் சென்று வண்டி மாடுகளுக்கு மாதம் ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்.

மாட்டு வண்டித் தொழிலாளர்களுக்கு இலவசக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

மாடு இறந்தால் ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்று புதுச்சேரி சட்டமன்றத்தில் அறிவித்ததை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 40 விவசாயிகளுக்கு ரூ.10 லட்சம் கரும்பு நிலுவைத் தொகை

கரும்பு விவசாயிகள் முற்றுகைப் போராட்டத்தை அடுத்து முதல் கட்டமாக 40 விவசாயிகளுக்கு ரூ.10 லட்சம் கரும்பு நிலுவைத் தொகை வழங்கப்பட்டது.

÷கரும்பு நிலுவைத் தொகை ரூ.12.5 கோடி தர வேண்டும் உள்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை முன்பு முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

÷இதையடுத்து திருத்தணி கோட்டாட்சியர் கலைவாணி, கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் ஏ.டி.பாஸ்கரன் மற்றும் போலீஸôர் சங்க நிர்வாகிகளுடன் பேச்சு நடத்தினர்.

÷இதையடுத்து முதல் கட்டமாக 40 பேருக்கு ரூ.10 லட்சம் நிலுவைத் தொகை வழங்கப்பட்டது.

÷மீதித் தொகை 10 நாள்களில் தரப்படும் என எழுத்துப்பூர்வமாக உறுதி அளிக்கப்பட்டது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 45.43 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 45.43 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,382 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.43 டி.எம்.சி.

## விவசாயிகளுக்கு நியாய விலையில் தரமான விதைகள்

விவசாயிகளுக்கு நியாயமான விலையில், தரமான விதைகள் வழங்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தமிழ்நாடு விதைச்சான்று இயக்குநர் சா. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

÷திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் ஆட்மா திட்டத்தின்கீழ் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கான பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

விதைச் சான்று உதவி இயக்குநர் வி.சி. மகாதேவன் தலைமை வகித்தார்.

÷முகாமைத் தொடங்கி வைத்து தமிழ்நாடு விதைச் சான்று இயக்குநர் சா. பாலகிருஷ்ணன் பேசியது:

÷விற்பனையாளர்கள் தவறான விதைகளை விவசாயிகளுக்கு அளித்தால் உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும். எனவே கலப்படம் மற்றும் தரமில்லா விதைகள் விற்பனையைத் தடுக்க அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

÷விதைச் சட்டத்தை விற்பனையாளர்கள் முறையாகப் பின்பற்ற வேண்டும். அரசின் சார்பில் விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம், மருந்து மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதை முறையாகப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவ வேண்டும்.

முடிந்தவரை வெளிமாநில விதைகளைத் தவிர்த்து, நம் மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய முயல வேண்டும் என்றார்.

÷முகாமில், விதை ஆய்வு துணை இயக்குநர்கள் அண்ணாதுரை (ஈரோடு), பொன்னுச்சாமி நடேசன் (கோவை), தமிழ்நாடு தனியார் விதை உற்பத்தியாளர்கள் சங்க மாநிலச் செயலர் சி. காளிதாஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ஏலக்காய் இ-ஏலம் மீண்டும் தொடங்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

விவசாயிகளிடமிருந்து ஏலக்காயை இ-ஏலம் மூலம் பெறுவதை, 25 நாள்களாக வியாபாரிகள் புறக்கணித்திருந்த நிலையில் மீண்டும் இ-ஏலம் நடத்த ஸ்பைசஸ் வாரியத்துக்கு கேரள உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது. இதையடுத்து திங்கள்கிழமை (அக்.22) மீண்டும் ஏலம் துவங்குமா என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

கம்பம், புதுப்பட்டி, கூடலூர், காமயகவுண்டன்பட்டி, அனுமந்தன்பட்டி, கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் போடி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் ஆனவிலாசம், சாத்தான் ஓடை, நெடுங்கண்டம், கட்டப்பனை, புளியமலை, உடுப்பன்சோலை, பாறத்தோடு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 2 லட்சம் ஏக்கரில் விவசாய நிலங்கள் உள்ளன. இவற்றில் 1.5 லட்சம் ஏக்கரில் ஏலக்காய் சாகுபடி செய்து வருகின்றனர்.

நாட்டில் விளையும் ஏலக்காயில் 90 சதவீதம் இடுக்கி மாவட்டத்தில்தான் விளைவிக்கப்படுகிறது. இங்கிருந்து ஆண்டுதோறும் உள்நாடு மட்டுமின்றி, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி

செய்யப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும் ஏலக்காயை விவசாயிகள், மத்திய அரசின் ஸ்பைசஸ் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 8 நிறுவனங்களில் பதிவு செய்து, வாரத்தில் 7 நாள்களிலும் ஒவ்வொரு நிறுவனத்தில் நடத்தப்படும் ஏலத்தில் தரம், நிறம், சைஸ் அடிப்படையில் வியாபாரிகள் இ-ஏலம் மூலம் ஏலக்காயை கொள்முதல் செய்து வந்தனர்.

இந்த நிலையில் ஸ்பைசஸ் வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உயர்நிலைக் குழு இ-ஏலம் குறித்து ஆய்வு செய்து, 16 பரிந்துரைகளை மேற்கொண்டது. அதில் ஏலத்தொகையாக குறிப்பிட்ட நேரத்தில் 50 பைசா என்ற அடிப்படையில் விலை கூடுதல் கேட்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் பதிவு செய்த ஏலக்காய் முழுவதும் ஏலம் கேட்கப்படுவதில்லை என்றும் சில விவசாயிகள் பாதிக்கப்படுவதால், ஏலத்தொகையை ரூ. 5 ரூபாயாக உயர்த்தி கேட்க அரசு உத்தரவிட்டது. இதனால், கடந்த செப்டம்பர் 25-ந்தேதி முதல் இ-ஏலத்தை வியாபாரிகள் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர்.

இந்நிலையில், வியாபாரிகள் கேரள உயர் நீதிமன்றத்தில் ஏலத்தொகை ரூ.5 என்பதை ரத்து செய்ய கோரி வழக்குத் தொடர்ந்தனர். இதனையடுத்து விவசாயிகளும் தங்களது கருத்தையும் அறிந்து கொள்ள தங்களையும் வழக்கில் ஒரு வாதியாக சேர்க்கவேண்டும் என்றதால் அவர்களையும் நீதிமன்றம் அனுமதித்தது.

இந்நிலையில் உயர் நீதிமன்றம் மத்திய ஸ்பைசஸ் வாரியம் உடனடியாக ஏலக்காய் ஏலத்தை துவக்க வேண்டும், மேலும், எவ்வளவு தொகை ஏலம் கேட்கலாம் என்பதையும் முடிவு செய்து அறிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இதனால் கடந்த 25 நாள்களுக்கு பிறகு மீண்டும் ஏலம் துவங்க வாய்ப்பு இருப்பதால், விவசாயிகள் தங்களது ஏலக்காயை பதிய ஆர்வமாக உள்ளனர். ஆனால், அந்த தொகை ஏலக்காய் வியாபாரிகளுக்கு கட்டுப்படியாகும் தொகையாக இருந்தால் மட்டுமே அவர்கள் ஏலத்தில் கலந்து கொள்வார்கள் என்பதால், விலை நிர்ணயத்தை பொறுத்தே ஏலம் நடைபெறும் என்று விவசாயிகள் சிலர் தெரிவித்தனர்.

## உணவுப் பதனீட்டுத் தொழில் தொடங்க அரசு மானியம்'

உணவுப் பதனீட்டுத் தொழில் தொடங்க அரசு மானியம் வழங்கப்படுவதாக ஆட்சியர் எஸ். நாகராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: உணவுப் பதப்படுத்தும் தொழிலை ஊக்குவிக்க மத்திய நிதி உதவிபெறும் மானிய திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. உணவுப் பதனீட்டுத் தொழில் தொடங்க மத்திய அரசு 75 சதவீதமும், மாநில அரசு 25 சதவீதமும் நிதிஉதவி அளிக்கும்.

உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை தொடங்கவோ, இயங்கி வரும் தொழிற்சாலையை மேம்படுத்தவோ, விரிவுபடுத்தவோ இத் திட்டத்தில் பயன்பெறலாம்.

புதிதாக நிறுவப்படும் ஆலை, இயந்திரம், தொழில்நுட்பக் கட்டுமானங்கள் ஆகிய செலவுகளில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

அதிகபட்சமாக நபர் ரூ. 50 லட்சம் வரை மானியம் பெறலாம். மானியம் வழங்கும் பணியை செயல்படுத்த ஆட்சியர் தலைமையில் மாவட்ட உணவுப் பதப்படுத்துதல் இயக்க முகமை என்ற குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மானியம் கோரி பெறப்படும் விண்ணப்பங்களை இக் குழு பரிசீலித்து மாநில திட்ட அங்கீகார குழுவுக்கு பரிந்துரைக்கும்.

அதனடிப்படையில் மானியத் தொகை, ஆலை நிறுவ கடன் வழங்கிய வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

பயன்பெற விரும்புவோர் உரிய விண்ணப்பத்துடன் திட்ட அறிக்கை, பிற ஆவணங்களை வேளாண் துணை இயக்குநர், வேளாண் வணிகம், நாகர்கோவில் என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும் என்றார் அவர்.

## உரங்கள் விலை உயர்வு: விவசாயிகள் பாதிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பயிர்களுக்கு உரமிடும் பணியை விவசாயிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். ஆனால், உர விலை உயர்வால் அவர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் தோட்டப் பயிர்களான ரப்பர், கிராம்பு, அன்னாசி, கரையோரப் பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள வாழை, மரச்சீனி ஆகியவற்றுக்கு உரமிடும் பணியை விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

ஆனால், உரங்களின் விலை கடுமையாக அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

உரங்களின் விலை உயர்வால், ரப்பர் விவசாயிகள் பலர் குறைவான அளவில் உரங்களை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இதனால் உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட சிறுவிவசாயிகள் சங்கத் தலைவர் ஜி.கே. நம்பூதிரி கூறியதாவது:

மாவட்டத்தில் பரவலாக மழை தொடங்கியுள்ளது. இது தோட்டப் பயிர்களுக்கு உரமிட உகந்த பருவம்.

மழை தீவிரமடையும் முன்னர் உரமிடுவது நல்லது. ஆனால் பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இப்போது உரங்களின் விலை அதிகரித்துள்ளது. இது விவசாயிகளைப் பாதித்துள்ளது.

6 மாதங்களுக்கு முன் ஒரு மூட்டை பாக்டம்பாஸ் உரத்தின் விலை ரூ. 650. இப்போது ரூ. 970 ஆக உயர்ந்துள்ளது.

இதேபோல, ரூ. 350 ஆக இருந்த பொட்டாஷ் உரத்தின் விலை ரூ. 840 ஆகவும், டிஏபி உரத்தின் விலை ரூ. 927-ல் இருந்து ரூ. 1,252 ஆகவும் உயர்ந்துள்ளது.

யூரியா உரத்தின் விலையை மட்டும் அரசு கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இதன் விலை மட்டும் ரூ. 272 ஆக உள்ளது. இப்போது யூரியா உரத்தின் விலை குறைவாக இருப்பதால் பெரும்பாலான விவசாயிகள் அதிகமாக யூரியாவை வாங்கி பயன்படுத்துகின்றனர். இதனால் யூரியா தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக பாக்டம்பாஸ் விலை அதிகரிப்பால் வாழை விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே குத்தகைதொகை அதிகரிப்பு, அதிக கூலி உள்ளிட்ட காரணங்களால் இழப்புகளுக்கு உள்ளாகிவரும் வாழை விவசாயிகள், உரங்களின் விலை உயர்வால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, மத்திய, மாநில அரசுகள் உரங்களின் விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்து விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.

### விவசாயிகளுக்குப் பயிற்சி

ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்ஜித்சிங் தன்ராஜ் தலைமை தாங்கினார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செந்தூர்குமார், துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன், அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர். திருந்திய நெல்சாகுபடி குறித்தும், விதை நேர்த்தி செய்வது குறித்தும், கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி உதவிப் பேராசிரியர் ஜோசப்  செயல் விளக்கம் செய்து காட்டினார்.

## பசுந்தீவன சாகுபடி பயிற்சி

கரூரில் பசுந்தீவன பயிர் சாகுபடி குறித்த இலவசப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

கரூர் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கரூர் வட்டார பயனாளிகளுக்கு பண்டுகாரன்புதூரில் கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இந்தப் பயிற்சி நடைபெற்றது.

கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் என். குழந்தைசாமி, இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கி, இந்தத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு 25 சென்டில் தீவனப்புல் கோ 3, மற்றும் கோ 4 பயிரிடுவதற்கு ஒரு நபருக்கு ரூ. 3,000 வீதம் மானியம் தமிழக அரசால் வழங்கப்பட உள்ளது எனத் தெரிவித்தார்.

கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவருமான கே. செந்தில்வேல், பேராசிரியர் ந. அகிலா ஆகியோர் அதிகரித்து வரும் தீவன செலவைக் குறைக்க பசுந்தீவனம் உற்பத்தி செய்வது குறித்தும், சாகுபடி மற்றும் தொழில்நுட்பப் பராமரிப்பு முறைகள் குறித்தும் விளக்கம் அளித்தனர்.

வட்டார கால்நடை மருத்துவர்கள் மா. சேகர், கோபிநாத், கல்பனா, தெரஸô, ராணி, சுமதி ஆகியோர் பசுந்தீவன பயிர்களின் முக்கியத்தும் குறித்து விளக்கம் அளித்தனர்.

கரூர் வட்டாரத்தைச் சேர்ந்த 45 விவசாயிகளுக்கு தீவனப் பயிர் சாகுபடி குறித்த கையேடு வழங்கப்பட்டது. தீவனப் பயிர் சாகுபடி குறித்த கண்காட்சியும் நடைபெற்றது.

## பயிர்க் கடன்: விவசாயிகள் கோரிக்கை

கரூர் மாவட்டத்தில் தகுதியுள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளில் பாரபட்சமின்றி பயிர்க் கடன் வழங்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க குளித்தலை ஒன்றிய மாநாடு நங்கவரத்தில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் ஒன்றியத் தலைவர் சங்கரநாராயணன் தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் குளித்தலை ஒன்றியச் செயலர் பி. ராஜீ மாநாட்டை தொடக்கிவைத்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஜி. ரத்தினவேலு பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

நங்கவரத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையைப் பராமரித்து, மேம்படுத்த வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும் பாரபட்சமின்றி கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன் உள்ளிட்ட அனைத்துக் கடன்களையும் வழங்க வேண்டும்.

பாசன வடிகால் வாய்க்காலைத் தூர்வாரி கடைமடை வரை விவசாயம் செய்ய நீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

விவசாயத்துக்குத் தேவையான உரங்களைத் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 18 மணிநேரம் அறிவிக்கப்படாத மின் வட்டை அமல்படுத்தி வரும் தமிழக அரசைக் கண்டிப்பது, விவசாயம் செய்வதற்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும்,

அன்னிய முதலீட்டுக்கு எதிரகவும், மத்திய அரசின் மக்கள் விரோதப் போக்கை கண்டித்தும், விவசாயிகளைத் திரட்டி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைமையில் குளித்தலை ஒன்றியப் பகுதிகளில் தொடர் போராட்டங்கள் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலர் டி. இளங்கோவன் வாழ்த்திப் பேசினார்.

குளித்தலை ஒன்றிய புதிய தலைவராக சங்கரநாரயாணன், செயலராக பி. பெருமாள், பொருளாளராக ரங்கசாமி உள்பட 9 பேர் கொண்ட குழு தேர்வு செய்யப்பட்டடது.

## 600 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம்'

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடியைத் தீவிரப்படுத்த அனைத்து வட்டாரங்களிலும் 600 ஹெக்டேரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட உள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் ப. செந்தில்குமார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில், எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ், 1 பயனாளிக்கு ரூ. 6,640 மதிப்பில் விசைத்தெளிப்பான், பருத்தி மினிமிஷன் திட்டத்தின் கீழ், 2 பயனாளிகளுக்கு ரூ. 4,380 மதிப்பில் கைத்தெளிப்பான், தோட்டக்கலைத்துறை சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 14 பயனாளிகளுக்கு ரூ. 27,967 மதிப்பில் விதைகள் மற்றும் முந்திரிச் செடிகள், கோவா மாநிலத்தில் நடைபெற்ற உலக முந்திரி சாகுபடி கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிக்கு நினைவு பரிசுக்கான கேடயம் ஆகியவற்றை வழங்கி ஆட்சியர் மேலும் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் நெல் சாகுபடி இயல்பான பரப்பு 25,000 ஹெக்டேர் ஆகும். கடந்த ஆண்டு 27,400 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டதில், நிகழாண்டு இதுவரை 5,150 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது, சம்பா நாற்றாங்கால் அமைக்கும் பணி தீவிரமாக நடைப்பெற்று வருகிறது. சிறு தானியங்கள் 13,500 ஹெக்டேரிலும், பயிறுவகை பயிர்கள் 450 ஹெக்டேரிலும், பருத்தி 5,560 ஹெக்டேரிலும், கரும்பு 7,980 ஹெக்டேரிலும், எண்ணெய்வித்து 6,100 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சம்பா பருவத்திற்கு ஏற்ற ஆடுதுறை 38, ஆடுதுறை 39 மற்றும் கோ 43 ஆகிய விதைகள் தேவையான அளவு இருப்பு உள்ளது.

கார்த்திகை பட்டத்திற்கு தேவையான 15 டன் எண்ணெய்வித்துகள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு உள்ளது. யூரியா 528 மெ.டன், டி.ஏ.பி. 517 மெ.டன், பொட்டாஷ் 870 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் தேவையான அளவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் விற்பனை மையங்களில் இருப்பு உள்ளது.

மேலும், தேவையான உரங்கள் திருச்சிராப்பள்ளி டான்பெட் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருந்திய நெல் சாகுபடியைத் தீவிரப்படுத்த, மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் 600 ஹெக்டேரில் ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக 1 ஹெக்டேரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட உள்ளன. எனவே, விவசாயிகள் வேளாண்மைத் துறையில் அறிமுகப்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று பயனடைய வேண்டும் என்றார் அவர். மாவட்ட வருவாய் அலுவலர் கருப்பசாமி, இணை இயக்குநர் (வேளாண்மை) சேகர், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் முருகன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் செப்ந்தர்ராஜன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

## விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி: முன்பதிவு செய்ய அழைப்பு

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்முனைவோருக்கான உணவுப்பயிர், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துக்களில் விதை உற்பத்தி செய்வது குறித்து தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நிலையத் தலைவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் அக்டோபர் 31-ல் நெல்லில் தரமான விதை உற்பத்தி, நவம்பர் 1-ல் துவரை, உளுந்து மற்றும் பாசிப்பயறில் தரமான விதை உற்பத்தி, நவம்பர் 2-ல் நிலக்கடலையில் தரமான விதை உற்பத்திக்கான பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் விதை உற்பத்தி செய்வதற்கான அனைத்து தொழில்நுட்பங்களும், அதாவது, பயிருக்குத் தகுந்த பருவத்தைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, அறுவடை செய்து விதையை விற்பனைக்கு தயார்செய்வது வரை அனைத்து தொழில்நுட்பங்களும் விரிவாக பயிற்றுவிக்கப்படும்.

இந்தப் பயிற்சியில் விதை உற்பத்தி தொழில்முனைய ஆர்வமுள்ள ஊரக இளைஞர்கள், மகளிர் மற்றும் விவசாயிகள் கலந்துகொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் பெயரை முன்பதிவு செய்ய வேண்டும்.

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது 04322 290321, 8220015146 என்ற தொடர்பு எண்களிலோ முன்பதிவு செய்யலாம்.

## கால்நடை வளர்ப்பால் கிராமப்புற பொருளாதாரம் முன்னேறும்

கால்நடை வளர்ப்பின் மூலம் கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றமடையும் என்றார் சென்னை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் க. குமணன்.

புதுக்கோட்டையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கால்நடை அறிவியல் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நிறைவு விழாவில் கையேட்டை வெளியிட்டு, பயிற்சி முடித்த பயனாளிகளுக்கு இடுபொருள்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி அவர் பேசியது:

தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மையத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அறிவியல்

சார்ந்த கால்நடை, கோழிப் பண்ணை, மற்றும் பண்ணை சாரா தொழில்களில் வருவாய் ஈட்டுவதற்காக இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த மாவட்டத்தில், நன்கு படித்த சுயஉதவிக் குழு பெண்கள், குடும்பப் பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தப் பயிற்சியில் செயற்கை முறை கருவூட்டல், கால்நடை மற்றும் கோழிகளுக்கான தடுப்பூசி போடுபவர், குஞ்சுபொரிக்கும் மேலாண்மை, அறிவியல் முறையில் வெப்ப்ளாடு வளர்ப்பு போன்ற 12 வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி முடித்தவர்கள், தாங்கள் கற்றுக்கொண்ட தொழில்நுட்பங்களை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். புதிய கண்டுபிடிப்புகள் பண்ணை நடத்துபவர் வரை சென்றால்தான், திட்டம் முழு வெற்றி அடையும்.

மேலும், உற்பத்தி பொருள்கள் அனைத்தும் இடைத்தரகர்கள் இல்லாமல், நேரடியாக நுகர்வோரை சென்றடைய வேண்டும். அப்போதுதான் கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றமடையும் என்றார் அவர்.

நிகழ்ச்சிக்கு, சென்னை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழக இயக்குநர் ம. பாபு தலைமை வகித்தார். தஞ்சை கால்நடை பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் ந. புண்ணியமூர்த்தி வரவேற்றார். புதுக்கோட்டை கால்நடை மண்டல ஆராய்ச்சி மையத் தலைவர் பி.என். ரிச்சர்டுஜெகதீசன் நன்றி கூறினார்.

புதுக்கோட்டை நேரு இளையோர் மைய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் க. சதாசிவம், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் லெ. பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கனமழை: காரைக்கால் நெல் வயல்களில் தேங்கும் மழைநீர்

காரைக்காலில் விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்குவது தொடர்ந்தால், நெற்பயிர் பாதிக்கும் அபாயம் உள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

காரைக்காலில் நேரடி நெல் விதைப்பு மூலமும், சம்பா பயிராகவும் சுமார் 2 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. முறைப்பாசனம் மூலமும், பருவமழையாலும் காரைக்காலுக்கு தமிழகப் பகுதியிலிருந்து தண்ணீர் அதிகமாக வருகிறது. இது தாழ்வான சில வேளாண் நிலங்களில் புகுந்து வருகிறது. வயல் ஓரத்தில் உள்ள வாய்க்காலிலும் முழுமையாக

தண்ணீர் செல்வதால், வயலில் தேங்கியுள்ள தண்ணீர் வடிய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் சனிக்கிழமை கூறியது:

காரைக்காலில் கடந்த 12-ம் தேதி வரை நேரடி நெல் விதைப்பு 1600 ஹெக்டேர் நடைபெற்றுள்ளது. 10 ஹெக்டேரில் தாளடி சாகுபடி உள்ளது. இதில் குறைந்தகால பயிரான ஆடுதுறை 47, 48 மற்றும் வெள்ளைப் பொன்னி ரகங்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

இதுதவிர, அம்பகரத்தூர், திருநள்ளாறில் செல்லூர், சேத்தூர், பண்டாரவாடை மற்றும் நெடுங்காடு பகுதிகளில் சம்பா பயிராக விவசாயிகள் 135 ஹெக்டேரும், தாளடியாக 148 ஹெக்டேரும் நடவு செய்துள்ளனர்.

மழையால் இவை பாதிப்படையவில்லை. இருப்பினும், தொடர்ந்து மழை பெய்யும்போது திங்கள்கிழமை முதல் பயிரிடப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்யும் பணியை தொடங்கவுள்ளோம் என்றார்.

## 100% மானியத்தில் 1.30 லட்சம் மரக்கன்றுகள்

காரைக்காலில் மரப்பயிர் திட்டமாக 1.30 லட்சம் மரக்கன்றுகள் 100% மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

புதுச்சேரி அரசின் காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாறுபட்ட விவசாய சூழல், பருவமழை பொய்த்தல் அல்லது தள்ளிப்போகும் நிலை,தொழிலாளர் பற்றாக்குறை ஆகிய காரணிகளால்,குறுகிய காலப் பயிர் விவசாயத்துக்கு சவாலாக உள்ளது. புதுச்சேரி அரசின் வனம் மற்றும் வனவிலங்குத்துறை விவசாயிகளுக்கு மாற்றுப் பயிர் திட்டமாக மரப்பயிர் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

காரைக்கால் பகுதியில் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட 50 விவசாயிகளுக்கு 1.30 லட்சம் மரக்கன்றுகள் 100 % மானியத்தில் அளிக்கப்படுகிறது. நீண்டகால பயிர்களான சவுக்கு, தைலம், சிசு போன்ற மரக்கன்றுகள் தரமான வீரிய கன்றுகள் தமிழ்நாடு காகிதக்கூழ் தயாரிப்பு நிறுவனத்தின் கீழ் இயங்கும் ஹைடெக் நர்சரியிலிருந்து வரவழைக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு இப்பயிர் செய்வதற்கான பயிற்சி நடத்தப்பட்டு, அனுபவங்களுக்கு பல இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது. புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு, வனத்துறை அமைச்சர் டி.தியாகராஜன் ஆகியோர் ஆலோசனையின் பேரிலும் இத்திட்டம் அமல்படுத்துப்பட்டுள்ளது. ரூ.3.5 லட்சம் மதிப்பிலான கன்றுகள் வழங்கப்படுவதன் மூலம், சிறந்த முறையில் பயிர் செய்யும்போது, அறுவடை காலத்தில் தமிழ்நாடு டிஎன்பிஎல் நிறுவனத்தின் ஒப்பந்ததாரர்கள் நேரடியாக வந்து மரங்களை வாங்கிச் செல்வர். விவசாயிகளுக்கு நல்ல லாபத்தை தரக்கூடிய திட்டம் இது என்றார்.

## நேரடி விதைப்பில் களைகளைக் கட்டுப்படுத்த யோசனை

திருத்துறைப்பூண்டி வேளாண்மைக் கோட்டத்தில் சம்பா நேரடிவிதைப்பு செய்யப்பட்ட நிலங்களில் பயிர் முளைத்த வயல்களில் களைகளைக் கட்டுப்படுத்தி பயிரைப் பாதுகாக்க வேளாண்மைத்துறையினர் விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி உள்ளனர்.

இதுகுறித்து வேளாண்மை உதவிஇயக்குநர் த. நடேசன் வியாழக்கிழமை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது: திருத்துறைப்பூண்டி வேளாண்மைக் கோட்டத்தில் இதுவரை 14ஆயிரத்து 72ஹெக்டேர் பரப்பில் நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த நேரடிவிதைப்பு செய்யப்பட்ட வயல்களில் பயிர்கள் நன்றாக முளைத்து உள்ளன. கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழையினால் நிலத்தில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி,இனி முளைக்கும் களைகளைக் கட்டுப்படுத்திட ஏக்கருக்கு 400மி.லி பிரிட்டிலாக்குளோர் களைக்கொள்ளியை 20கிலோ மணலுடன் கலந்து நிலத்தில் நன்கு படும்படியாக தூவவேண்டும்.

அல்லது 200லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்த களைக்கொள்ளி அரசு வேளாண்மை விரிவாக்க மையங்களில் 50%மானிய விலையில் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

களைக்கொல்லி தெளித்த 3தினங்களுக்கு பின்னர், 1செ.மீ நீர்கட்டி ஏக்கருக்கு டி.ஏ.பி.50கிலோ,பொட்டாஷ் 25கிலோ,துத்தநாகசல்பேட் 10கிலோ,அல்லது நெல்நுண்ணூட்டம் 5கிலோ, மேலும் 6 பாக்கெட் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியம் உயிர்உரங்களை 25கிலோ தொழுஉரத்துடன் கலந்து இடவேண்டும்.

துத்தநாகசல்பேட், ஜிப்சம் நெல்நுண்மூட்ட உயிர்உரங்கள் தமிழக முதல்வரின் சம்பா சிறப்பு தொகுப்புத்திட்டத்தின் கீழ்75%மானியவிலையில் வழங்கப்படுகிறது.

தேவையான டி.ஏ.பி, பொட்டாஷ், யூரியா  உள்ளிட்ட் அனைத்து உரங்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும், தனியார் உரக்கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

நேரடி விதைப்பு செய்துள்ள விவசாயிகள் உழவு மானியத்தைப் பெற உரிய விண்ணபங்களைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட பகுதி உதவி வேளாண்மை அலுவலரிடம் அளித்து பயன்பெற வேண்டுமென உதவிவேளாண்மைஇயக்குநர் த.நடேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

22.10.2012 A.M

## ஆழ்வார்குறிச்சி பகுதியில் தொடர் மழை வயல்வெளிகள் நீரில் மூழ்கின

ஆழ்வார்குறிச்சி:ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர் பகுதிகளில் தொடர் மழையால் வயல்வெளிகள் நீரில் மூழ்கியது.ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர், கடையம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த இரண்டு தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. ஏற்கனவே தண்ணீர் இல்லாமல் இருந்த நிலையில் சில தினங்களுக்கு முன் பெய்த மழையை நம்பி ஒரு சிலர் நாற்று பாவியுள்ளனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையிலும் தொடர்ந்து மழை பெய்ததால் ஆம்பூர் கருணையாற்றில் நீர்வரத்து அதிகமானது.தொடர் மழையால் நாற்று பாவிய ஒருசில வயல்களும் தண்ணீரில் மூழ்கின. சாலைகளில் ஜல்லிகள் பெயர்ந்து குண்டும், குழியுடன் காணப்படுகிறது. தெருக்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

## சொட்டு நீர் பாசனம் அமைத்த விவசாயிகளுக்கு மானிய உரம்

செஞ்சி : விவசாயிகளுக்கு மானியத்தில் உரம் வழங்கும் விழா நடந்தது.செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் பதிவு செய்து கரும்பு நடவு செய்துள்ள விவசாயிகளில், 15 விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ளனர். இந்த விவசாயிகளுக்கு 2 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பில் நீரில் கரையும் உரங்கள் மானியத்தில் வழங்கப்பட்டது.செஞ்சி வேளாண்மை விரிவாக்க மையத் தில் நடந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் சுகுமார் தலைமை தாங்கினார். ராஜ்ஸ்ரீசர்க்கரை ஆலை உதவி பொதுமேலாளர் பாஸ்கரதாஸ் முன்னிலை வகித்தார்.உதவி மேலாளர் இளங்குமரன், விரிவாக்க அலுவலர் பிரபாகரன், துணை வேளாண்மை அலுவலர் சகாதேவன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மனுவேல், மாணிக்கம், ஜெயபாரதி, அதினா, உமாப்பிரியா கலந்து கொண்டனர்.

## பண்டிகை காலத்தால் உளுத்தம் பருப்பு விலை கிடுகிடு



சேலம்: நவராத்திரி துவக்கம், சரஸ்வதி பூஜையை தொடர்ந்து, தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், உளுத்தம் பருப்பு, பாசி பருப்பு ஆகியவற்றின் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு தேவையான உளுந்தம் பருப்பு மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நடப்பாண்டில் மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா மாநிலங்களில் உளுந்து, பாசி பயறு ஆகியவற்றின் விளைச்சல், 60 சதவீதம் உயர்ந்துள்ளது.இதனால், கடந்த மாதம் தமிழகத்துக்கு இவற்றின் வரத்து அதிகரித்ததால் விலையில் சரிவு ஏற்பட்டது.

தற்போது நவராத்திரி பண்டிகை வடமாநிலத்தில் கோலாகலமாக துவங்கி நடந்து வருவதால், அங்கு அறுவடை நிறுத்தப்பட்டுள்ளதோடு, ஆலைகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அங்கிருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் உளுந்தம் பருப்பு, பாசி பருப்பின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை, தினம் தோறும், பருப்பு வகைகள் 55 லாரிகளில் வந்து கொண்டிருந்தன. இது, தற்போது, 30 லாரிகளாக குறைந்து விட்டன. இந்நிலையில், தீபாவளிக்கு இன்னும் மூன்று வாரங்கள் மட்டுமே உள்ளதால், சந்தையில் இவற்றிற்கான தேவை, அதிகரித்துள்ளது. இதனால் உளுந்தம் பருப்பின் விலை, குவிண்டாலுக்கு, 400 ரூபாய் வரையும், கிலோவுக்கு, ஐந்து ரூபாய் வரையும் உயர்ந்துள்ளது.கடந்த வாரம், 6,600 ரூபாய்க்கு விற்ற, ஒரு குவிண்டால் முதல் ரக உளுந்தம் பருப்பு, தற்போது, 7,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இரண்டாம் ரகம், 6,100 ரூபாயில் இருந்து, 6,500 ரூபாயாகவும், மூன்றாம் ரகம், 5,800 ரூபாயில் இருந்து, 6,200 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.மொத்த விலையில் உயர்வு ஏற்பட்டதை அடுத்து சில்லரை விலையில், முதல் ரகம் கிலோ, 72 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் கிலோ, 69 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. உளுந்தம் பருப்பை தொடர்ந்து பாசிப் பருப்பின் விலையும் உயர்ந்துள்ளது.கடந்த வாரம், 6,500 ரூபாய்க்கு விற்ற, ஒரு குவிண்டால் பாசிப் பருப்பு, தற்போது, 6,900 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இரண்டாம் ரகம், 6,200 ரூபாயிலிருந்து, 6,650 ரூபாயாக உயர்ந்துள்ளது.

தீபாவளி பண்டிகை காரணமாக இந்த பருப்பு வகைகளின் விலை மேலும் உயரும் என,

வியாபாரிகள் தெரிவித்தனர்.சேலம் செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த பருப்பு வியாபாரி சதாசிவம் கூறியதாவது:தமிழகத்துக்கு தேவையான உளுந்தம் பருப்பு கர்நாடக மாநிலம் தாவனிக்கெரே, மகாராஷ்டிரா, குல்பர்கா ஆகிய இடங்களில் இருந்து விற்பனைக்கு வருகின்றன. நவராத்திரி காரணமாக இந்த பகுதிகளில் தற்போது அறுவடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், தமிழகத்துக்கான வரத்தில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.ஆனால், வியாபாரிகளிடம் பொதுமான அளவிற்கு, பயிறு, பருப்பு வகைகள் இருப்பு உள்ள நிலையில், தாங்கள் ஆதாயம் பெரும் நோக்கில், தீபாவளி பண்டிகையை காரணம் காட்டி விலையை உயர்த்தியுள்ளனர்.

## வெங்காயம் விலை உயர்ந்தது



நாசிக்: உள்நாட்டில், பருவ மழை குறைந்ததால், வெங்காயம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இதன் விலை, குவிண்டாலுக்கு, 925 ரூபாயாக அதிகரித்துள்ளது.நம் நாட்டில், மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில், அதிக அளவில் வெங்காயம் உற்பத்தியாகிறது. அண்மையில் முடிவுற்ற கரீப் பருவத்தில், இம்மாநிலங்களில் காலதாமதமான மற்றும் குறைந்த மழைப் பொழிவால், வெங்காயம் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.இதனால், வெங்காயம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நாசிக் மற்றும் அதை சுற்றியுள்ள சந்தைகளுக்கு, உயர்ரக வெங்காயம் வரத்து வெகுவாக குறைந்துள்ளது.நேற்று முன்தினம், நாசிக் சந்தைக்கு, 1,100 டன் அளவிற்கே வெங்காயம் வரத்து இருந்தது. இதன் விலை, குவிண்டாலுக்கு, 925 ரூபாய் வரை விலை போனது. அதேசமயம், கடந்த 3ம் தேதி, ஒரு குவிண்டால் வெங்காயம் விலை, 540 ரூபாய் என்ற அளவில் இருந்தது.மேலும் மலேசியா, வளைகுடா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து, நம் நாட்டிற்கு, வெங்காயம் வேண்டி ஆர்டகள் குவியத் துவங்கியுள்ளன. இதுவும், வெங்காயம் விலை உயர்விற்கு காரணமாகும்.எனவே, வரும் நாட்களில் வெங்காயம் விலை மேலும் உயரக் கூடும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## தேவை குறைந்ததால் மிளகாய் விலையில் சரிவு

கொச்சி:நடப்பாண்டில், உள்நாட்டில், மிளகாய் உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அதிகளவில் கையிருப்பு இருப்பதால், மிளகாய் விலை குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகளவில், மிளகாய் உற்பத்தியில், இந்தியா, 45 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது. தற்போது, உள்நாட்டில், மிளகாய் உற்பத்தி, 13-14 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது.நடப்பாண்டில், வங்கதேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில், மிளகாய் உற்பத்தி நன்கு இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், இந்நாடுகளுக்கான மிளகாய் ஏற்றுமதி குறையும்.மேலும், சீனாவிலும், மிளகாய் உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், சர்வதேச சந்தையில், சீனா நமக்கு, போட்டி நாடாக இருக்கும்.பொதுவாக, மிளகாய் ஏற்றுமதியை பொறுத்தே, அதன் விலை உள்நாட்டில் இருக்கும். இவ்வாண்டு, ஏற்றுமதி குறையும் நிலையில், இதன் விலை, மேலும் சரிவடைய வாய்ப்புள்ளது.சென்ற 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் மிளகாய் ஏற்றுமதி, 2.41 லட்சம் டன்னாக இருந்தது. இதன் மதிப்பு, 2,144 கோடி ரூபாயாகும்.தொடக்கத்தில், தென்மேற்கு பருவ மழை குறைந்ததால், மிளகாய் உற்பத்தி குறையும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஆகஸ்ட் மாதத்தில் இருந்து, மழைப்பொழிவு அதிகரித்ததை அடுத்து, இதன் சாகுபடி பரப்பளவு உயர்ந்துள்ளது. இதனால், முதல் மதிப்பீட்டை விட, இரண்டாவது மதிப்பீட்டில், மிளகாய் உற்பத்தி அதிகரிக்கும் என, தெரியவந்துள்ளது. என்.சி.டீ.இ., நிறுவனத்தின் முன்பேர வர்த்தக நடப்பு சந்தையில், சென்ற வாரம், ஒரு குவிண்டால் மிளகாய் விலை, 5,158 ரூபாயாக இருந்தது.நாட்டின், ஒட்டுமொத்த மிளகாய் உற்பத்தியில், ஆந்திரா, 7.50 லட்சம் டன் பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது. இந்நிலையில், காலதாமத மழைப் பொழிவால், இம்மாநிலத்தில், மிளகாய் சாகுபடி பரப்பளவு, கடந்த ஆண்டை விட, 30 சதவீதம் குறைந்துள்ளது. அதேசமயம், மத்திய பிரதேசத்தில், உயர் ரக மிளகாய் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அம்மாநிலத்தில் இதன் உற்பத்தி அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

## கொப்பரையில் கூடுதல் வருவாய்: விவசாயிகள் மகிழ்ச்சி



தர்மபுரி: ஒரு கிலோ கொப்பரை, 36 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தேங்காயை விட, கொப்பரையில் சற்று கூடுதல் வருவாய் கிடைப்பதால், விவசாயிகள், கொப்பரை தேங்காய் விற்பனையில் கவனத்தை திருப்பியுள்ளனர்.உலகம் முழுவதும், 19 நாடுகளில், 61 லட்சம் ஹெக்டேரில், தென்னை பயிரிடப்படுகிறது. ஆண்டுக்கு, 3 கோடி டன் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. உலகளவில், தேங்காய் உற்பத்தியில், பிலிப்பைன்ஸ், 51 சதவீதமும், இந்தியா, 35 சதவீத பங்களிப்பையும் கொண்டுள்ளன. இந்தியாவில் உற்பத்தியாகும் தேங்காய், 75 சதவீதம், ஐக்கிய அரபு நாடுகளுக்கும், ஏழு சதவீதம் நேபாளத்துக்கும், ஆறு சதவீதம், இங்கிலாந்துக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில், ஆண்டுக்கு, 19 லட்சம் ஹெக்டேரில், தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.கேரளா, 39 லட்சம் டன் தேங்காய் உற்பத்தி செய்து முதலிடத்தில் உள்ளது. அடுத்த இடங்களில் தமிழகம் (34 லட்சம் டன்), கர்நாடகா (11 லட்சம் டன்) ஆகியவை உள்ளன. தமிழகத்தில், 3.80 லட்சம் ஹெக்டேரில், தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.கோவை, திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், நெல்லை, கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி மற்றும் மதுரை மாவட்டங்களில், அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 20 ஆயிரத்து, 223 ஹெக்டேரில், தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.குறிப்பாக, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், தென்பெண்ணையாற்று படுகை, சின்னாறு, காவிரி ஆற்றுப்படுகையில், தென்னை விவசாயம் செழிப்பாக நடந்து வருகிறது.

உள்ளூர் தேவைகள் போக இங்கிருந்து, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு, தேங்காய் விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.சில ஆண்டுகளாக, மற்ற மாநிலங்களில் தேங்காய் உற்பத்தி அதிகரித்து இருப்பதை தொடர்ந்து, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து, தேங்காய், வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்புவது குறைந்துள்ளது.உள்ளூர் சந்தைகளை பொறுத்த வரை, உற்பத்தியின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.தற்போது, முதல் தரமான தேங்காய் ஒன்று ஆறு ரூபாய் வரை விற்பனையாகிறது. தேங்காய் விலை வீழ்ச்சியை தொடர்ந்து, விவசாயிகள் கொப்பரை தேங்காய் விற்பனையில் களம் இறங்கிஉள்ளனர்.தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள், கொப்பரை தேங்காய் உற்பத்தியில், அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.இப்பகுதிகளுக்கு, ஈரோடு, பூந்துறை, பெருந்துறை, விருதுநகர் உள்ளிட்ட இடங்களில் இருந்து, தேங்காய் எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் கொப்பரை தேங்காயை கொள்முதல் செய்து வருகின்றனர்.அதிக அளவில் கொப்பரை உற்பத்தி செய்யும் விவசாயிகள், ஈரோடு மாவட்டத்தில் உள்ள தேங்காய் எண்ணெய் ஆலைகளுக்கு நேரடியாக விற்பனை செய்து வருகின்றனர்.

## மாவட்டத்தில் ரூ.16.8 லட்சத்தில்துல்லிய பண்ணையம் திட்டம்

சிவகங்கை:""தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ், 200 ஏக்கரில் காய்கறி பயிர்களை சாகுபடிக்கு, ரூ.16.8 லட்சத்தில் துல்லிய பண்ணையம் அமைக்கப்படும்," என, தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார். அவர் கூறியதாவது:மாவட்டத்தில், ஆண்டுதோறும் சராசரியாக 600 எக்டேரில் வெண்டை, கத்தரி, தக்காளி, கொடிவகை காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. இதுதவிர 5 ஆயிரம் எக்டேரில் மிளகாய் சாகுபடி நடக்கிறது. இப்பயிர்களில் பாசன நீர், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளை சாதாரண முறையில் அழிக்கும் போது, செடிகளின் வேர்ப்பகுதிகள் மட்டுமின்றி, சுற்றியுள்ள பகுதிகளும் அழிக்கப்பட்டு விடும். இதை தவிர்த்து நீர்பாசனம் மற்றும் இடுபொருட்களை துல்லியமாக பயிர்களுக்கு கிடைக்க செய்து குறைந்த செலவில் அதிக விளைச்சல் மற்றும் வருமானம் தரும் துல்லிய பண்ணைய திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.இத்திட்டப்படி, நடப்பாண்டு, 200 ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைத்து காய்கறி சாகுபடி செய்யப்படும். வெண்டை, கத்தரி, தக்காளி, மிளகாய் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள், தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதற்கென நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.43,816 மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் அளிக்கப்படும். பயிர் சாகுபடிக்கென வீரிய ஒட்டுரக விதை மற்றும் நீரில் கரையும் உரங்கள் எக்டேருக்கு, ரூ.20 ஆயிரம் மானியத்தில் வழங்கப்படும். எனவே, விவசாயிகள் துல்லிய பண்ணையம் திட்டத்தில், காய்கறிகளை பயிரிட்டு அதிக வருமானம் பெறவேண்டும், என்றார்

## பூச்சி மருந்துகளின் தரம் அறிய சிறப்பு குழுவேளாண் இணை இயக்குனர் தகவல்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடைகளில் விற்பனை செய்யப்படும் பூச்சி நோய் மருந்துகளின் தரத்தை நடைமுறைப்படுத்த சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.மாவட்ட வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 70 ஆயிரம் ஹெக்டேரில் பல்வேறு வகையான பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. வருடத்தில் கரீப் மற்றும் ரபி ஆகிய, இரு சாகுபடி பருவங்களில் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்கள், பருத்தி, கரும்பு உள்ளிட்ட அனைத்து காய்கறி பயிர்களும், மா, கொய்யா, சப்போட்டா போன்ற பழவகைகளும், ரோஜா, ஜெருபரா, கார்னேசன், குண்டுமல்லி போன்ற பூ வகைகளும் சாகுபடி செய்யப்படுகிறது.

பயிருக்கு ஏற்றவாறு, பூச்சி நோய் கட்டுப்படுத்த பூச்சி கொல்லி மருந்துகள் விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 380 தனியார் பூச்சி மருந்து கடைகளின் மூலமாக, பல்வேறு தயாரிப்பு நிறுவனங்களின் பூச்சி மருந்துகள் விற்கப்படுகிறது. பூச்சி நோய் மருந்துகளை விற்பனை செய்ய, விற்பனை நிலையங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்கள் மூலமாக விற்பனை உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. அவற்றின் தரங்களை

ஆராய, சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்களை அனுப்பி தரம் அறியப்படுகிறது. தரமற்ற பூச்சி கொல்லி மருந்து தயாரித்த நிறுவனங்கள், ஒட்டு மொத்த விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குபதிவு செய்து, உரிய தண்டனை அளிக்கப்படுகிறது.மேலும், தரத்தை அதிக அளவில் நடைமுறைப்படுத்த மாவட்ட அளவில் வேளாண்மை துணை இயக்குனர் தலைமையில், சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. பூச்சி நோய் மருந்துகள் தரம் சம்மந்தமாக குறைபாடுகள் ஏதேனும் இருப்பின், குழுவில் இடம்பெற்றுள்ள வேளாண் இணை இயக்குனர், 94876-38100, வேளாண்மை உதவி இயக்கனர் தரக்கட்டுப்பாடு, 94434-91459, வேளாண் அலுவலர் தரக்கட்டுப்பாடு, 97870-76794 மற்றும் வட்டார வேளாண் உதவி இயக்குனர்கள் கிருஷ்ணகிரி, 94432-40425, காவேரிப்பட்டணம் மற்றும் ஊத்தங்கரை, 98428-83423, மத்தூர், 93618-12803, பர்கூர், 94422-32992, வேப்பனப்பள்ளி, 94433-15218, சூளகிரி, 94434-85660, ஓசூர், 94425-67999, தளி, 93600-58944, கெலமங்கலம், 81445-96115 ஆகிய மொபைல்ஃபோன் எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

## ஆயுத பூஜைக்கு 15 ஆயிரம் வாழைத்தார்: கோபி வேளாண் மையத்துக்கு வருகை

கோபிசெட்டிபாளையம்:ஆயுத பூஜையை முன்னிட்டு, கோபி வேளாண்மை விற்பனை மையத்துத்தில், 15 ஆயிரம் வாழைத்தார் விற்பனைக்கு வந்துள்ளது.கோபி வட்டாரத்தில் மூன்று பாசனங்களுக்கு உட்பட்ட வேட்டைக்காரன் கோவில், பங்களாபுதூர், கள்ளிபட்டி, டி.என்.பாளையம், கோபி, கொளப்பலூர், கூகலூர் பகுதிகளில், 15 ஆயிரம் ஏக்கரில் கதளி, நேந்திரம், ரோபஸ்டரா, ரஸ்தாளி, மொத்தன், பச்சைவாழை, பூவன், தேன் வாழை ஆகிய ரக வாழை பயிரிடப்பட்டுள்ளன.கடந்தாண்டு துவக்கத்தில் மஞ்சள் விலை வீழ்ச்சியடைய துவங்கியது. கரும்பு வெட்டு கூலி உயர்வு மற்றும் கரும்பு கட்டுபடியாகாத விலையால், நடப்பாண்டு வாழை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டியதால் வாழை சாகுபடி பரப்பு அதிகரித்தது.

வாழை அறுவடை சீஸன் என்பதால் அனைத்து பகுதிகளிலும் வாழை குலை வெட்டும் பணி தீவிரமாக நடக்கிறது.ஆயுத பூஜையை முன்னிட்டு வாழை விற்பனை அதிகரிக்கும் என்பதால், கணிசமான அளவு விலை உயரும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். கோபி சுற்று வட்டாரத்தில் அதிகளவில் வாழை அறுவடை செய்யப்பட்டு, நேற்று விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. வாழை சீஸன் காரணத்தில் கோபி வேளாண்மை விற்பனை சங்கத்துக்கு, 7,000 தார்கள் வரை வரத்தாகும். நேற்று, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைத்தார்கள் வரத்தானது.விவசாயிகள் கூறியதாவது:

மஞ்சள் விலை வீழ்ச்சி, கரும்பு வெட்டு கூலி உயர்வு போன்ற பிரச்னையால் வாழை அதிகளவில்

பயிரிட்டோம். வாழையை பொருத்தவரை ஓராண்டு பயிரிட்டால் இரண்டு ஆண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை வாழை குலை அறுவடை செய்யலாம். முதலில் வரும் குலை நன்றாக இருக்கும்.அடுத்த ஆண்டு பக்கவாட்டு கன்றுகள் மூலம் குலை வரும் என்பதால் தார் பிடிப்பு குறைவாக காணப்படும். நடப்பாண்டு வாழையில் இலை கருகல் நோய் பாதிப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.நடப்பாண்டு மே முதல் ஜூலை மாதம் வரை கதளி, நேந்திரம் போன்றவை கிலோ, 40 முதல், 45 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போதைய நிலவரப்படி நேந்திரம், கதளி ஒரு கிலோ, 16 முதல், 19 ரூபாய் வரை விற்கப்படுகிறது.வாழை விலை வீழ்ச்சி விவசாயிகளுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. வாழைக்கு கட்டுபடியான விலை நிர்ணயிக்க அரசு பரிந்துரை செய்ய வேண்டும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தேயிலை ஏலத்தில் வீழ்ச்சி

குன்னூர் : குன்னூர் வர்த்தகர்கள் தேயிலை ஏல மையத்தில் கடந்த வாரம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் ஏல மையத்தில் 42வது ஏலம் கடந்த 18 மற்றும் 19ம் தேதிகளில் நடந்தது. இதில் தேயிலைக்கு கூடுதல் விலை கிடைத்த போதும் விற்பனை அளவு குறைந்தது. கடந்த வாரம் 11 லட்சம் கிலோ தேயிலை விற்பனையான நிலையில், இந்த வாரம் 10.5 லட்சம் கிலோ விற்பனையானது. இதனால் 50 ஆயிரம் கிலோ தேயிலை தூள் குறைவாக விற்பனையானது. ஆனால் சராசரி விலை 84.03 ரூபாயிலிருந்து இந்த வாரம் 84.69 ரூபாயாக உயர்ந்தது. இதன் காரணமாக கடந்த வாரம் 9.24 கோடி ரூபாய் வர்த்தகம் நடந்த நிலையில், இந்த வாரம் வர்த்தகம் 8.90 கோடி ரூபாயாக குறைந்தது. இதன் காரணமாக 34 லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. இது 3.68 சதவீத வீழ்ச்சியாகும்.

## தீவன அபிவிருத்திதிட்ட பயிற்சி முகாம்

கரூர்: கரூர் மாவட்ட பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயிற்சி முகாம் நடந்தது. முகாமில், "தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு, 25 சென்டில் தீவனப்புல் கே-3 மற்றும் கோ-4 பயிரிட, ஒரு நபருக்கு, மூன்றாயிரம் ஆயிரம் ரூபாய் வீதம், மானியமாக, வழங்கப் படுகிறது' என, கால்நடை பராமரித்துத்துறை உதவி இயக்குனர் டாக்டர் குழந்தைசாமி தெரிவித்தார்.மேலும், அதிகரித்து வரும் தீவன செலவை குறைக்க, பசுந்தீவனம் உற்பத்தி மற்றும் தொழில் நுட்ப பராமரிப்பு முறைகள் குறித்து, மைய பேராசிரியர்கள் செந்தில்வேல், அகிலா ஆகியோர் விளக்கி பேசினர்.வட்டார கால்நடை டாக்டர்கள் சேகர், கோபிநாத், கல்பனா, தெரஸா ராணி, சுமதி உட்பட பலர் பங்கேற்றனர். பயிற்சியில் பங்கேற்ற, 45 விவசாயிகளுக்கு தீவனப்பயிர் சாகுபடி குறித்த கையேடு வழங்கப்பட்டது.

## திருந்திய நெல் சாகுபடி முறையைபின்பற்ற வேளாண் துறை அறிவுரை

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில், சம்பா நெல் சாகுபடி பணிகளை துவக்கியுள்ள விவசாயிகள், அதிக மகசூல் பெற, திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றுமாறு வேளாண்மைத்துறை அறிவுரை வழங்கியுள்ளது.இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் சிவசங்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை:புதுக்கோட்டை மாவட்டத்தில், இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டதால், கடும் வறட்சி நிலவியது. இதனால், சம்பா நெல் சாகுபடி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது, வடகிழக்கு பருவமழை பெய்யத் துவங்கியுள்ளது. இதுவரை, 3.6 செ.மீ., மழை பெய்துள்ளது. இதை வைத்து, சம்பா நெல் சாகுபடி பணியில், விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.மாவட்டம் முழுவதும் இதுவரை, 23 ஆயிரத்து, 500 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. சிறுதானியங்கள், 3,500 ஹெக்டேரிலும், பயறுவகை பயிர்கள், 1,600 ஹெக்டேரிலும், எண்ணெய்வித்து பயிர்கள், 4,200 ஹெக்டேரிலும், கரும்பு, 2,450 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.சம்பா சாகுபடிக்கு தேவையான, சான்று பெற்ற உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டுரக நெல் விதைகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவற்றில், உயர் ரக நெல் விதைகள் கிலோ ஒன்றுக்கு, ஐந்து ரூபாய் வீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. வீரிய ஒட்டு ரக நெல் விதைகள், கிலோ ஒன்றுக்கு, 20 ரூபாய் வீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. சம்பா சாகுபடிக்கு தேவையான நுண் சத்து, 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில், இவற்றை பெற்றுக்கொள்ளலாம்.விவசாயிகளுக்கு தேவையான அளவு உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. டி.ஏ.பி., 2,440 மெட்ரிக் டன், யூரியா, 3,541 மெட்ரிக் டன், பொட்டாஷ், 1,495 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ், 3,240 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டு, கூட்டுறவு உர விற்பனை நிலையங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.சம்பா நெல் சாகுபடி செய்வதில், காலதாமதம் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் அனைவரும் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி சாகுபடி செய்யவேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற, இம்முறை வழிவகுக்கும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## விதை கிராம திட்டம்: விவசாயிகளுக்கு பயிற்சி

ஆர்.கே.பேட்டை : விதை கிராம திட்டத்தின்கீழ், வெள்ளத்தூர் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது.

ஆர்.கே.பேட்டை அடுத்த, வெள்ளாத்தூரில் விதை கிராம திட்டத்தின்கீழ், 100 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமை வட்டார வேளாண் உதவி இயக்குனர் முகம்மது ரபீக் துவக்கி வைத்தார். ஊராட்சி தலைவர் தரணி நாராயணன் தலைமை வகித்தார்.

திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி மையத்தின் இணைப் பேராசிரியர் அகிலா, மணிமேகலை ஆகியோர் மணிலா சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விரிவாக

எடுத்துக் கூறினர்.

திருந்திய நெல் சாகுபடி குறித்தும் விளக்கப் பட்டது. விவசாயிகள் தங்களது சந்தேகங்களை அதிகாரிகளிடம் கேட்டு விளக்கம் பெற்றனர்.

உதவி வேளாண் அலுவலர்கள் மாசிலாமணி, ராஜேந்திரன், பாலு பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

## சொட்டு நீர் பாசனம் அமைத்த விவசாயிகளுக்கு மானிய உரம்

செஞ்சி : விவசாயிகளுக்கு மானியத்தில் உரம் வழங்கும் விழா நடந்தது.செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் பதிவு செய்து கரும்பு நடவு செய்துள்ள விவசாயிகளில், 15 விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ளனர். இந்த விவசாயிகளுக்கு 2 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பில் நீரில் கரையும் உரங்கள் மானியத்தில் வழங்கப்பட்டது.செஞ்சி வேளாண்மை விரிவாக்க மையத் தில் நடந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் சுகுமார் தலைமை தாங்கினார். ராஜ்ஸ்ரீசர்க்கரை ஆலை உதவி பொதுமேலாளர் பாஸ்கரதாஸ் முன்னிலை வகித்தார்.உதவி மேலாளர் இளங்குமரன், விரிவாக்க அலுவலர் பிரபாகரன், துணை வேளாண்மை அலுவலர் சகாதேவன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மனுவேல், மாணிக்கம், ஜெயபாரதி, அதினா, உமாப்பிரியா கலந்து கொண்டனர்.

## விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக முதல்வரின் முன்னோக்குத் திட்டங்கள்

விழுப்புரம் : விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு முன்னோக்குத் திட்டங்களை முதல்வர் ஜெ., செயல்படுத்தி வருவதாக கோலியனூர் ஒன்றிய சேர்மன் விஜயாசுரேஷ்பாபு பேசினார்.கோலியனூர் வட்டாரத் தோட்டக்கலை துறை மூலம் வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா கோலியனூரில் நடந்தது.விழுப்புரம் பாரத ஸ்டேட் பாங்க் மேலாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்து, வங்கி மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் குறித்து விளக்கமளித்தார்.தோட்டக்கலை உதவி இயக்குனர் வீராசாமி வரவேற்றார். ஒன்றிய சேர்மன் விஜயா சுரேஷ்பாபு விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி பேசியதாவது:முதல்வர் ஜெ., உத்தரவின் பேரில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 50 சதவீதம் மான்ய விலையில் காய்கறி விதைகள், பழமரச் செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் பழமரச் செடிகள், மலர் சாகுபடி மற்றும் அவைகளுக்கான உரம், பூச்சிமருந்து போன்றவை 50 சதவீதம் மான்யத்தில் வழங்கப்படுகின்றன.தமிழக முதல்வரின் 100 சதவீதம் மான்யத்தில் குறு, சிறு விவசாயிகளுக்கும், 75 சதவீதம் மான்யத்தில் பெரிய விவசாயிகளுக்கும் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்படுகிறது.புறநகர் காற்கறிகள் சாகுபடி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளின் கூட்டுப் பொறுப்புக்குழு அமைக்கப்பட்டு காய்கறிகள் சாகுபடி அதிகரிக்கப்படுகின்றன.காய்கறிகளுக்கான சேமிப்பு மையமும் அமைக்கப்படுகின்றன. தேசிய

வேளாண்மை உயர் தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டதின் கீழ் உரம், பூச்சிமருந்து ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படுகின்றன.தேசிய மூங்கில் வளர்ப்பு திட்டதில் 4 ஆயிரம் ரூபாய் மான்யம் வழங்கப்படுகின்றன. இவ்வாறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த முதல்வர் ஜெ., பல்வேறு முன்னோக்குத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.இவ்வாறு சேர்மன் விஜயா சுரேஷ்பாபு பேசினார்.விழாவில் ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் சுரேஷ்பாபு, உதவி வேளாண்மை அலுவலர்கள் கலையரசன், சிவராமன், கலையரசி உட்பட பலர் கலந்து கொண்டனர்.உதவி வேளாண்மை அலுவலர் பரமசிவம் நன்றி கூறினார்.

விழுப்புரம் : விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு முன்னோக்குத் திட்டங்களை முதல்வர் ஜெ., செயல்படுத்தி வருவதாக கோலியனூர் ஒன்றிய சேர்மன் விஜயாசுரேஷ்பாபு பேசினார்.கோலியனூர் வட்டாரத் தோட்டக்கலை துறை மூலம் வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா கோலியனூரில் நடந்தது.விழுப்புரம் பாரத ஸ்டேட் பாங்க் மேலாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்து, வங்கி மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் குறித்து விளக்கமளித்தார்.தோட்டக்கலை உதவி இயக்குனர் வீராசாமி வரவேற்றார். ஒன்றிய சேர்மன் விஜயா சுரேஷ்பாபு விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி பேசியதாவது:முதல்வர் ஜெ., உத்தரவின் பேரில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 50 சதவீதம் மான்ய விலையில் காய்கறி விதைகள், பழமரச் செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் பழமரச் செடிகள், மலர் சாகுபடி மற்றும் அவைகளுக்கான உரம், பூச்சிமருந்து போன்றவை 50 சதவீதம் மான்யத்தில் வழங்கப்படுகின்றன.தமிழக முதல்வரின் 100 சதவீதம் மான்யத்தில் குறு, சிறு விவசாயிகளுக்கும், 75 சதவீதம் மான்யத்தில் பெரிய விவசாயிகளுக்கும் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்படுகிறது.புறநகர் காற்கறிகள் சாகுபடி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளின் கூட்டுப் பொறுப்புக்குழு அமைக்கப்பட்டு காய்கறிகள் சாகுபடி அதிகரிக்கப்படுகின்றன.காய்கறிகளுக்கான சேமிப்பு மையமும் அமைக்கப்படுகின்றன. தேசிய வேளாண்மை உயர் தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டதின் கீழ் உரம், பூச்சிமருந்து ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படுகின்றன.தேசிய மூங்கில் வளர்ப்பு திட்டதில் 4 ஆயிரம் ரூபாய் மான்யம் வழங்கப்படுகின்றன. இவ்வாறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த முதல்வர் ஜெ., பல்வேறு முன்னோக்குத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.இவ்வாறு சேர்மன் விஜயா சுரேஷ்பாபு பேசினார்.விழாவில் ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் சுரேஷ்பாபு, உதவி வேளாண்மை அலுவலர்கள் கலையரசன், சிவராமன், கலையரசி உட்பட பலர் கலந்து கொண்டனர்.உதவி வேளாண்மை அலுவலர் பரமசிவம் நன்றி கூறினார்.

## அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி

விழுப்புரம்: கோலியனூர் வேளாண் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.கோலியனூர் வேளாண் துறை மூலம் அட்மா திட்டத்தின் கீழ் 50 விவசாயிகளுக்கு சிறப்பு நேரடிப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக விவசாயிகள் கடலூர் மாவட்டம், பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலையம் மற்றும் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு நேரில் அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.கோலியனூர் வேளாண் உதவி இயக்குனர் செல்வசேகர், விவசாயிகளுக்கு காய்கறி பயிர்கள் பராமரிப்பு முறை, புதிய ரகங்கள், வீரிய ஒட்டு ரகங்கள், செம்மை கரும்பு சாகுபடி, புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.பயிற்சியில் உதவி விதை அலுவலர் கருணாநிதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி, அலுவலர்கள் நடராஜன், தேவதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கல்யாண பூசணிக்காய் அறுவடைக்கு தயார்

திண்டிவனம் : திண்டிவனம் பகுதியில் விவசாயிகள் பயிர் செய்துள்ள கல்யாண பூசணிக்காய் அறுவடைக்கு தயாராக உள்ளது.திண்டிவனம் அடுத்த அவ்வையார் குப்பம், முப்புளி உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கல்யாண பூசணிக்காய் பயிர் செய்துள்ளனர்.இந்த காய் பயிர் செய்து மூன்று மாதத்தில் விளைந்து அறுவடை செய்யப்படுகிறது. கல்யாண பூசணிக்காயை வாகனங்களுக்கு திருஷ்டி கழிப்பதற்காகடுவும், ஆயுதப்பூஜை தினத்தன்று படைக்கவும், வீடு மற்றும் ஓட்டல்களில் கூட்டு பொறியல் செய்வதற்கும் பயன்படுத்தி வருகின்றனர்.வரும் 23ம் தேதி ஆயுதப்பூஜை விழா கொண்டாடப்படவுள்ள நிலையில், திண்டிவனம் பகுதியில் விவசாயிகள் பயிரிட்டுள்ள கல்யாண பூசணிக்காய்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.தற்போது, கல்யாண பூசணிக்காய் ஒரு கிலோ 5 ரூபாய்க்கு விவசாயிகள் விற்பனை செய்ய துவங்கியுள்ளனர்.

## சேலத் தில் 1,000 டன் பழங் கள் குவிப்பு: விலை கிடுகிடு

சேலம்: ஆயுத பூஜையை முன் னிட்டு, சேலத் தில், 1,000 டன் பழங் கள் விற் ப னைக்கு குவிக் கப் பட் டுள் ளது. கடந்த ஆண்டை ஒப் பி டு கை யில் பழங் க ளின் வரத்து, 50 சத வீ தம் சரிந் துள் ள தால், விலை உயர்வு ஏற் பட் டுள் ளது.தமி ழ கத் துக்கு தேவை யான ஆப் பிள் பழம், டெல்லி, சிம்லா ஆகிய இடங் க ளில் இருந்து, வாரத் துக்கு, 50 டன் பழங் கள் மட் டுமே விற் ப னைக்கு வரு வது வழக் கம். ஆயுத பூஜையை முன் னிட்டு பழங் க ளின் வரத் தில் பல மடங்கு உயர்வு காணப் ப டும். ஆனால், நடப்பு ஆண்டு எதிர் பார்த்த அளவு பழங் க ளின் வரத்து இல்லை. கடந்த ஆண் டில், ஆயுத பூஜை விற் ப னைக் காக, 1,000 டன் ஆப் பிள் பழங் கள் விற் ப னைக்கு வந் தது. ஆனால், நடப்பு ஆண்டு, 500 டன் பழம் மட் டுமே விற் ப னைக்கு வந் துள் ளது. எதிர் பார்த்த வரத்து இல் லா த தால், விலை உயர்வு ஏற் ப டும் என வியா பா ரி கள் தெரி வித் த னர்.நேற் றைய நில வ ரப் படி ஆப் பிள் பழங் கள் மொத்த விலை யில் கிலோ, 100 ரூபாய் முதல், 130 ரூபாய் வரை விற் பனை செய் யப் பட் டன.

ஆனால், ஆயுத பூஜையை முன் னிட்டு, இவற் றின் விலை, 20 சத வீ தம் அள வுக்கு உயர்த் தப் பட் டுள் ளது.ஆந் திர மாநி லம் கடப்பா, ராஜ முந் திரி பகு தி க ளில் இருந்து ஆயுத பூஜையை முன் னிட்டு விற் ப னைக்கு கொண்டு வரப் ப டும் சாத் துக் குடி பழத் தின் வரத் தில், 50 சத வீ தம் சரிவு ஏற் பட் டுள் ளது. சாத் துக் குடி பழங் க ளின் விலை, 20 சத வீ தம் அள வுக்கு உயர்வு ஏற் பட் டுள் ளது. நேற் றைய நில வ ரப் படி மொத்த விலை யில், கிலோ, 40 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை விற் பனை செய் யப் பட் டது.மாது ளம் பழம் வரத்து, 50 டன் னாக குறைந் துள் ளது. இதன் விலை முன் எப் போ தும் இல் லாத அள வுக்கு உயர்ந் துள் ளது. நேற் றைய நில வ ரப் படி கிலோ, 120 ரூபாய் முதல், 150 ரூபாய் வரை விற் கி றது.சப் போட்டோ பழத் தின் வரத் தும் பாதி யாக குறைந்து விட் டது. இவற் றின் விலை, 15 முதல், 40 சத வீ தம் வரை விலை உயர்ந் துள் ளது. நேற்று சப் போட்டோ கிலோ, 40 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை விற் றது. மற்ற பழங் க ளின் விலை யில் உயர்வு ஏற் பட்டு வரும் நிலை யில், கம் பம் பகு தி யில் இருந்து திராட்சை பழம் வரத்து அதி க ரித் துள் ளது.

கடந்த வாரம் திராட்டை பழம் கிலோ, 25 ரூபாய் முதல், 30 ரூபாய் வரை, விற் ப னை யா னது. தற் போது, கிலோ, 35 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை, விற் ப னை யா கி றது.

இது குறித்து சேலம் சக்தி பழ மண் டி யின் உரி மை யா ளர் உமா பதி கூறி ய தா வது:கடந்த ஆண்டு ஆயுத பூஜை யின் போது, டெல் லி யில் இருந்து ஆப் பிள் பழங் க ளும், ஆந் தி ரா வில் இருந்து சாத் துக் குடி பழத் தின் வரத் தும் அதி க ரித்து இருந் தது. இத னால் விலை கட் டுக் குள் இருந் தது. நடப் பாண்டு இந்த மாநி லங் க ளில் இருந்து வரத்து எதிர் பார்த்த அளவு இல்லை.நடப் பாண்டு பழங் க ளின் விலை யில் சற்று உயர்வு ஏற் பட் டுள் ளது. இருந்த போதி லும் தற் போது விற் ப னைக்கு வரும் பழங் கள் அனைத் தும், முதல் தர மான பழங் கள் என் பது குறிப் பி டத் தக் கது.இவ் வாறு அவர் கூறி னார்.

## ஊரக தொழி லா ளரை விவ சா யத் துக்கு பயன் ப டுத் த ணும்

சேலம்: "தே சிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட் டத் தில் பணி யாற் று ப வர் களை, விவ சாய பணிக்கு பயன் ப டுத்த, மாநில அரசு நட வ டிக்கை எடுக்க வேண் டும்' என, விவ சா யி கள் குறை தீர் கூட் டத் தில் வலி யு றுத் தப் பட் டது.சேலம், கலெக் டர் அலு வ ல கத் தில் விவ சா யி கள் குறை தீர் கூட் டம், நேற்று நடந் தது. கலெக் டர் மக ர பூ ஷ ணம் தலைமை வகித் தார். வேளாண் இணை இயக் கு னர் செங் கோட் டு வேல், டி.ஆர்.ஓ., பிர சன்ன வெங் க டே சன் ஆகி யோர் முன் னிலை வகித் த னர்.கூட் டத் தில் நடந்த விவா தம் பின் வ ரு மாறு:விவ சாயி ஜெய ரா மன்: வசிஷ்ட நதி யில், சுகா தார சீர் கேடு அதி க ரித் துள் ளது. தொழிற் சா லை க ளில் இருந்து வெளி யேற் றப் ப டும் கழி வு கள், வசிஷ்ட நதி யில் கலந்து விடு வ தால், மனி தர் க ளுக் கும், கால் ந டை க ளுக் கும் பல் வேறு தோல் நோய் கள் ஏற் ப டு கின் றன.

எனவே, தொழிற் சா லை க ளில், சுத் தி க ரிப்பு நிலை யம் அமைக் கப் பட் டுள் ளதா என, கலெக் டர் ஆய்வு செய்து, நட வ டிக்கை எடுக்க வேண் டும்.விவ சாயி அரங் க சங் க ரைய்யா: கால் ந டை க ளுக் கான தீவ ணங் க ளில் கலப் ப டம் அதி க ரித் துள் ளது. புண் ணாக்கு உள் ளிட்ட அனைத்து தீவ ணங் க ளி லும், கலப் ப டம் செய் வதை அதி கா ரி கள் ஆய்வு செய்ய வேண் டும். ஊரக வேலை உறுதி திட் டத் தின் கீழ் பணி யாற் றும் கூலி யாட் களை, விவ சாய பணிக்கு ஒதுக்கி தர வேண் டும்.

விவ சாயி சுந் த ரம்: உரம் விலை ஏற் றம் கண் டுள் ள தற்கு, உரங் களை தனி யார் விற் பனை செய்ய, மத் திய அரசு ஒப் பு தல் வழங் கி யதே கார ணம். எனவே, உரங் களை, மாநில அரசே, நேர டி யாக விவ சா யி க ளுக்கு விற் பனை செய்ய நட வ டிக்கை எடுக்க வேண் டும்.வட கி ழக்கு பரு வ மழை தீவி ரம் அடைந் துள்ள நிலை யில், விவ சாய பணிக்கு கூலி யாட் கள் கிடைக் காத நிலை ஏற் பட் டுள் ளது. ஊரக வேலை உறுதி திட்ட பணி யா ளர் களை, விவ சாய பணிக்கு ஒதுக்க வேண்டி, மாநில அரசு, மத் திய அர சி டம் ஒப் பு தல் பெற நட வ டிக்கை எடுக்க வேண் டும்.

விவ சாயி பெரு மாள்: நூறு நாள் வேலை உறுதி திட் டப் ப ணியை ஆண்டு முழு வ தும் பணி அளிக் கும் வித மாக, விவ சாய பணிக்கு, திட் டப் ப ணி யா ளர் களை ஒதுக்க நட வ டிக்கை எடுக்க வேண் டும். விவ சா யி கள் ஆட் கள் பற் றா கு றை யால் தவித்து வரு வ தால், வேலை உறுதி திட்ட பணி யா ளர் களை, விவ சாய பணிக்கு ஒதுக் கிக் கொடுக்க வேண் டும்.

கலெக் டர் மக ர பூ ஷ ணம்: விவ சா யி க ளுக்கு தேவை யான உரம் இருப்பு வைக் கப் பட் டுள் ளது. தொடக்க வேளாண்மை கூட் டு றவு கடன் சங் கம், தனி யார் விற் பனை நிலை யங் க ளில், 3,557 டன் யூரியா, 1,695 டன் டிஏபி, 1,595 டன் யூரியா, 4,230 டன் பொட் டாஷ், 7,585 டன் காம்ப் ளக்ஸ் உரங் கள் இருப் பில் உள் ளது.

தொடர்ந்து மழை பெய்து வரும் நிலை யில், விவ சா யி க ளுக்கு தேவை யான விதை கள் உட னுக் கு டன் வழங்க நட வ டிக்கை எடுக் கப் பட் டுள் ளது. இந்த கூட் டத் தில் பெறப் பட்ட, 52 மனுக் கள் மீது உரிய நட வ டிக்கை எடுக்க உத் த ர வி டப் பட் டுள் ளது.

இவ் வாறு விவா தம் நடந் தது.

## தொடர் மழை யால்மஞ் சள் ஏலம் ரத்து

ஆத் தூர்: ஆத் தூர், புதுப் பேட்டை வேளாண்மை உற் பத் தி யா ளர் கள் கூட் டு றவு விற் பனை சங் கத் தில், தொடர் மழை கார ண மாக, மஞ் சள் ஏலம் ரத்து செய் யப் பட் டது.

ஆத் தூர், புதுப் பேட் டை யில் உள்ள வேளாண்மை உற் பத் தி யா ளர் கள் கூட் டு றவு விற் பனை சங் கத் தில், வாரந் தோ றும் பருத்தி, மஞ் சள் மற் றும் எண் ணெய் வித் து கள், கொள் மு தல் செய் யப் ப டு கி றது.

நேற்று முன் தி னம், 100 மூட்டை மஞ் சள் விற் ப னைக்கு வந் தது. தொடர் மழை கார ண மாக, மஞ் சள் வியா பா ரி கள் ஏலத் தில் கலந்து கொள் ள வில்லை. அத னால், மஞ் சள் ஏலத்தை ரத்து செய்து, கூட் டு றவு நிர் வா கம் உத் த ர விட் டது.

## வேளாண்துறை பயிற்சி முகாம்

நாமக்கல்: எருமப்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில், உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கான, இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது.நாமக்கல் வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) நடராஜன் தலைமை வகித்து, பயிற்சியை துவக்கி வைத்தார். விதைச் சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், வேளாண் அலுவலர் கவிதா, தோட்டக்கலை அலுவலர் மணிமேகலை ஆகியோர் பங்கேற்று, விதைகளின் உற்பத்தி தொழில்நுட்பம், திருந்திய நெல் சாகுபடி ஆகியவை குறித்து பேசினர்.வேளாண் அலுவலர்கள் சித்திரைச்செல்வி, குமாரசாமி, பட்டு ஆய்வாளர் செல்வசந்திரன், எருமப்பட்டி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் உட்பட பலர் பங்கேற்றனர்.

## ஆத்தூர் பகுதியில் காற்றுடன் கனமழை வாழைகளுக்கு முட்டுகொடுக்கும் பணி துவக்கம்

ஆத்தூர்:ஆத்தூர் பகுதியில் தொடர்ந்து காற்றுடன் மழை பெய்து வருவதால் வாழைகளுக்கு முட்டு கொடுக்கும் பணி நடந்து வருகிறது.ஆத்தூர் சுற்றுப்பகுதியில் கடந்த 17ம்தேதி மாலையில் சூறைக்காற்றுடன் பெய்த கனமழையால் மேலாத்தூர், சேதுக்குவாய்த்தான், சொக்கப்பழங்கரை உள்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 5 லட்சம் வாழைகளும் ஒடிந்து சாய்ந்தன.
இதனால் அந்தப்பகுதி விவசாயிகளுக்கு ரூ. 5 கோடிக்கும் மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது.
இதற்கிடையில் ஆத்தூர் பகுதியில் காற்றுடன் மழை தொடர்ந்து வருகிறது. இதனால் மீண்டும் வாழைகள் ஆங்காங்கே சாய்ந்த வண்ணம் உள்ளன.இதனையடுத்து வாழைகள் காற்றில் சாய்வதை தடுக்க சவுக்கு கம்பால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கும் பணி அந்தப்பகுதியில் தொடர்ந்து நடந்து வருகிறது.
இதற்காக சவுக்கு கம்பு லோடு தொடர்ந்து அந்தப்பகுதிகளில் இறக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே தண்ணீர் கிடைக்காமல் நீண்ட கோடையில் மோட்டார் மூலம் பாசனம் செய்ததோடு, கூலி ஆட்களும் கிடைக்காமல், உர விலையும், குத்தகை ரேட்டும் உயர்ந்ததால் திணறி வந்த விவசாயிகளுக்கு,வாழைக்கு முட்டு கொடுக்கும் பணியால் விவசாயச்செலவு கடுமையாக அதிகரித்துள்ளது.
இதனால் கடந்த ஆண்டு ரூ.140 லிருந்து ரூ.180 வரை இருந்த வாழைத்தார் விலை, இந்த ஆண்டு ரூ.200லிருந்து ரூ.250 வரை உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
எனவே ஆத்தூர் பகுதியில் வரும் பொங்கலுக்கு வாழை தட்டுப்பாடு ஏற்படுவதோடு, வாழைப்பழ விலையும் தாறுமாறாக உயரும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

## தேனியில் அரிசி விலை குறைவு

தேனி:வட மாநிலங்களில் அறுவடை தொடங்கி உள்ளதால், வரத்து அதிகரித்து தேனி மார்க்கெட்டில் பயறு, பருப்பு, அரிசி விலைகள் குறைந்துள்ளது.கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத் உட்பட பல மாநிலங்களில் தற்போது அறுவடை சீசன் தொடங்கி உள்ளது. இதனால் இம்மாநிலங்களில் இருந்து தேனி, கேரள மார்க்கெட்டுகளுக்கு பயறு, பருப்பு, அரிசி வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இவற்றின் விலைகள் குவிண்டாலுக்கு சராசரியாக 200 ரூபாய் வரை குறைந்துள்ளது.தேனி மார்க்கெட்டில், 100 கிலோ 6800 ரூபாயாக இருந்த துவரம் பருப்பு 200 ரூபாய் குறைந்து 6600 ரூபாயாக விற்கப்படுகிறது. 6900 இருந்த கடலைப்பருப்பு 6700 ரூபாய் ஆகவும், 6380 இருந்த உளுந்து 6180 ரூபாய் ஆகவும், 6000 இருந்த பாசிப்பருப்பு 5900 ரூபாய் ஆகவும் சரிந்துள்ளது. கர்நாடகா பொன்னி, செல்லப்பொன்னி, ஐ.ஆர்., 20 உட்பட அனைத்து ரக அரிசி விலைகளும் குவிண்டாலுக்கு 200 ரூபாய் விலை குறைந்துள்ளது.தேனி வியாபாரி பாலகிருஷ்ணன் கூறுகையில்,"அரிசி வரத்து அதிகரிப்பாலும், விற்பனை சரிவாலும் விலை குறைந்துள்ளது. இந்த விலை சரிவு சில வாரங்கள் வரை நீடிக்கும். ஜீனி விலையில் மாற்றம் இல்லை.பாமாயில் உட்பட எண்ணெய் வகைகளும், வறுகடலை,கொண்டை கடலை உட்பட பல ரகங்களும் தற்போது விலை குறைந்து வருகிறது,என்றார்.

## விவசாயிகளுடன் கலந்துரையாடல்

ரெட்டியார்சத்திரம்:செம்மடைப்பட்டியில், வேளாண்துறை சார்பில் பருத்தி அனுசரனை ஆராய்ச்சி திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் ஆய்வு செய்தார். மேலும், சொட்டுநீர்ப் பாசன முறையில், மக்காச்சோள பெருவிளக்கப் பண்ணை வயல்களை ஆய்வு செய்தபோது, இரும்புச் சத்து பற்றாக்குறை தென்பட்டது.அதற்கேற்ப, நுண்ணூட்டச் சத்து கரைசலை தெளிக்க ஆலோசனை வழங்கினார். விவசாயிகளுடன், கலந்துரையாடல் நடந்தது. வேளாண்மை அலுவலர்கள் ராமராஜ், மோகன்குமார், உதவி வேளாண்மை அலுவலர் பத்திரிநாராயணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## தேனி மார்க்கெட்டில் பருப்பு, அரிசி விலை குறைவு

தேனி:கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத் உட்பட பல மாநிலங்களில் தற்போது அறுவடை சீசன் தொடங்கி உள்ளது.இதனால் இம்மாநிலங்களில் இருந்து தேனி, கேரள மார்க்கெட்டுகளுக்கு பயறு, பருப்பு, அரிசி வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இவற்றின் விலைகள் குவிண்டாலுக்கு சராசரியாக 200 ரூபாய் வரை குறைந்துள்ளது.தேனி மார்க்கெட்டில், 100 கிலோ 6800 ரூபாயாக இருந்த துவரம் பருப்பு 200

ரூபாய் குறைந்து 6600 ரூபாயாக விற்கப்படுகிறது. 6900 இருந்த கடலைப்பருப்பு 6700 ரூபாய் ஆகவும், 6380 இருந்த உளுந்து 6180 ரூபாய் ஆகவும், 6000 இருந்த பாசிப்பருப்பு 5900 ரூபாய் ஆகவும் சரிந்துள் ளது. கர்நாடகா பொன்னி, செல்லப்பொன்னி, ஐ.ஆர்., 20 உட்பட அனைத்து ரக அரிசி விலைகளும் குவிண்டாலுக்கு 200 ரூபாய் விலை குறைந்துள்ளது.
வியாபாரி பாலகிருஷ்ணன்: அரிசி வரத்து அதிகரிப்பாலும், விற்பனை சரிவாலும் விலை குறைந்துள்ளது. இது சில வாரங்கள் நீடிக்கும். ஜீனி விலையில் மாற்றம் இல்லை. பாமாயில் உட்பட எண்ணெய் வகைகளும், வறுகடலை, கொண்டை கடலை விலை குறைந்து வருகிறது,என்றார்.

## தொடர் மழையிலும் நிரம்பாத குளங்கள்:: விவசாயிகள் கவலை

பழநி:பழநி பகுதியில் தொடர் மழை பெய்தும், குளங்களுக்கு தண்ணீர் வராததால், விவசாயப்பணியை துவங்க முடியாத சூழ்நிலையில் விவசாயிகள் உள்ளனர். குளங்களில், பொதுப்பணித்துறை மூலம், "அயன் வாம்' திட்டத்தின் கீழ், தூர்வாருதல், கரைஅமைக்கும் பணி நடைபெறுவதால், குளத்திற்கு வரும் மழைநீர் நேரடியாக சண்முகநதியில் கலக்கிறது. வரதாம நதி அணை நிரம்பி 256 கன அடி தண்ணீர் வெளியேறுகிறது. அவை நேரடியாக ஆற்றில் சென்றுவிடுவதால், ஆயக்குடி பெரியகுளம் வழியாக தண்ணீர் வராததால், அதனைச் சார்ந்த குமாரநாயக்கன் குளம், வீரகுளம், மாப்பிள்ளை நாயக்கன்குளம், தேவநாயக்கன் குளம், கலிக்கம்பட்டிகுளம், கோதைமங்களம் குளம், பாப்பன்குளம் உட்பட ஏராளமான குளங்களுக்கு நீர்வரத்து இல்லை.இதனால் மழைபெய்தும், குளங்களில் தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் நடவுப்பணியை துவங்க தயக்கம் காட்டிவருகின்றனர். வரதமாநதி அணை தண்ணீரை உடனடியாக,குளங்களுக்கு திருப்பிடவேண்டும் என விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.ஆயக்குடி விவசாயி சிவசுப்பிரமணியன் கூறியதாவது: பழநியில் கனமழை பெய்கிறது. ஆனாலும் விவசாயப்பாசனத்திற்கான குளங்களில் சுத்தமாக தண்ணீர் இல்லை. அணை நிரம்பி தண்ணீர் வீணாக, ஆற்றிற்கு செல்கிறது. அணைநீரை குளங்களுக்கு கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யவேண்டும், என்றார்.பொதுபணித்துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன் கூறியதாவது: "அயம்வாம்' திட்டத்திற்காக, ஏற்கனவே அடைக்கப்பட்டிருந்த, அணையின் "ஷட்டர்' இன்று (நேற்று) திறக்கப்பட்டுள்ளது. பெரியவாய்க்கால் வழியாக குளங்களுக்கு தண்ணீர் செல்கிறது. வையாபுரிகுளம் நிரம்பியுள்ளதால் அதன் வழியாக பாப்பன்குளம், கோதைமங்கள குளம் உட்பட அனைத்து குளங்களுக்கு தண்ணீர் செல்லும், என்றார்.

## நீர்பிடிப்பு பகுதியில் கனமழை பெரியாறு அணை நீர்மட்டம் உயர்கிறது



கூடலூர்: தொடர் மழையால் தென் மாவட்டங்களில் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. பெரியாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் ஒன்றரை அடி உயர்ந்தது. முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழையால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நேற்று முன்தினம் வினாடிக்கு 907 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 4,367 கன அடியாக அதிகரித்தது. இதனால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் ஒன்றரை அடி உயர்ந்தது. 152 அடி உயரமுள்ள பெரியாறு அணை யின் நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி 122.40 அடியாக இருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,158 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. தற்போது அணையின் மொத்த நீர் இருப்பு 3103 மில்லியன் கனஅடி.71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 44 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 480 கனஅடி. அணையிலிருந்து மதுரை நகரின் குடிநீர் தேவைக்காக மட்டும் வினாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. சண்முகாநதி அணை நீர்மட்டம் 34 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 88 கன அடி.தேனி மாவட்டத்தில், தேக்கடியில் 90.8 மி.மீ, சிவகங்கை மாவட்டத்தில் தேவகோட்டையில் 61 மிமீ. திண்டுக்கல் மாவட்டத்தில் சத்திரப்பட்டியில் 29.40 மிமீ. மதுரை மாவட்டத்தில் தனியாமங்கலம் 5 மி.மீ, விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையத்தில் 22 மிமீ, ராமநாதபுரம் மாவட்டத்தில் தீர்த்தாண்டதானத்தில் 136 மி.மீ மழையும் அதிகபட்ச அளவாக பதிவாகியுள்ளது.பேச்சிப்பாறை அணை: குமரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் பேச்சிப்பாறை அணைக்கு நேற்று

பிற்பகலில் 2 ஆயிரம் கன அடிக்கு மேல் நீர்வரத்து உயர்ந்தது.

நேற்று ஒரே நாளில் 4 அடி உயர்ந்து 10.10 அடியானது. பெருஞ்சாணி நீர்மட்டம் நேற்று 5 அடி உயர்ந்து 28 அடியானது. சிற்றார்,1ல் 4.59 அடியும், சிற்றார்,2ல் 4.69 அடியும், பொய்கையில் 8.50 அடியும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 47.57 அடியாக அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் அதிகபட்சமாக சிற்றார்,1ல் 19 மி.மீ, பேச்சிப்பாறையில் 16, பெருஞ்சாணியில் 16.8, சிற்றார்,2ல் 17, புத்தன் அணையில் 17 மி.மீட்டர் மழை பதிவு இருந்தது.கோமுகி அணை: விழுப்புரம் மாவட்டத்தில் அணைகள் மற்றும் ஏரிகள் நிரம்பியுள்ளன. 46 அடி உயரமுள்ள கோமுகி அணையின் நீர்மட்டம் 40.5 அடியாக உள்ளது. 32 அடி உயரமுள்ள வீடூர் அணையின் நீர்மட்டம் 18 அடியாக உள்ளது. 36 அடி உயரமுள்ள மணிமுக்தா அணையின் நீர்மட்டம் 20 அடியாக உள்ளது. 119 அடி உயரமுள்ள சாத்தனூர் அணை நீர்மட்டம் 78.4 அடியாக உள்ளது. இதேபோல் ஏரிகளில் சுமார் 30 சதவீதம் தண்ணீர் நிரம்பியுள்ளது.மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 63.53 அடியாக அதிகரித்துள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் மாலை விநாடிக்கு 4303 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை விநாடிக்கு 3124 கனஅடியாக குறைந்தது. காவிரி டெல்டா பாசன பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருவதால் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு நீர் திறப்பு கடந்த 2 நாட்களாக விநாடிக்கு ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை 63.30 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று மாலை 63.53 அடியாக அதிகரித்தது. நீர் இருப்பு 27.38 டிஎம்சி.

## தமிழகத்தில் பலத்த மழை நீடிக்கும்



சென்னை: கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் கடலோர மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான கிராமங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. நீலகிரியில் மண்சரிவால் பல இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.வங்கக் கடலில் நிலை கொண்டு இருந்த

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை லட்சத் தீவை ஒட்டிய அரபிக் கடல் பகுதிக்கு நேற்று மாலை நகர்ந்து சென்றது. இதையடுத்து, தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும். தென் மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குன்னூரில் 170 மிமீ: நேற்று அதிகபட்சமாக குன்னூர், கடலூர் ஆகிய இடங்களில் 170 மிமீ மழை பெய்துள்ளது. இதனால் நீலகிரி மலையில் மண் சரிவும் ஏற்பட்டுள்ளது. மேலும், நெய்வேலி 150 மிமீ, விழுப்புரம் 130 மிமீ, கேத்தி 110 மிமீ, மணிமுத்தாறு, சோழவரம் 100 மிமீ, பொன்னேரி, செங்குன்றம், பரங்கிப் பேட்டை, திருக்கோயிலூர், சிதம்பரம் 90 மிமீ, கோத்தகிரி 80 மிமீ, சிவகிரி, திண்டிவனம் 70 மிமீ, தேவக்கோட்டை, அண்ணா பல்கலைக் கழகம், உதகமண்டலம், சோளிங்கர், நன்னிலம், சேத்தியாதோப்பு 60 மிமீ, ஆரணி, தென்காசி, உதகமண்டலம், அறந்தாங்கி, கொடவாசல், காட்டுமன்னார்கோயில், விருத்தாசலம், புதுச்சேரி, செய்யாறு, காரைக்கால், ஆயக்குடி, செங்கல்பட்டு, கேளம்பாக்கம், கொள்ளிடம் 50 மிமீ மழை பெய்துள்ளது.

கடலூர், நெய்வேலி, நீலகிரியில் நேற்று கனமழை கொட்டித் தீர்த்தது. விழுப்புரம் மாவட்டம் உட்பட சில மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. நீலகிரியில் பல இடங்களில் மண்சரிவால் மக்கள் வாழ்க்கை அடியோடு முடங்கியது. போக்குவரத்து பாதிப்பு: நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று முன் தினம் காலை யில் தொடங்கிய மழை இரவு முழுவதும் நீடித்தது. சாலை மற்றும் குடியிருப்பு பகுதிகளை மழை நீர் சூழ்ந்தது. 26வது கொண்டை ஊசி வளைவு பகுதியில் மண் சரிந்தது. இதில் மரம் வேரோடு பெயர்ந்து சாலையின் குறுக்கே விழுந்தது. இதனால் மஞ்சூர-ஊட்டி, குன்னூர், எடக்காடு பகுதிக்கான வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கோரகுந்தா மந்து பகுதியில் ராட்சத மரம் விழுந்து மஞ்சூர்&அப்பர்பவானி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பிக்கட்டி&ஊட்டி சாலையில் எடக்காடு பாதகண்டி அருகே மண் திட்டு இடிந்து விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கரியமலை பள்ளி கட்டிட தடுப்பு சுவர் இடிந்தது.தொட்டகம்பை பாரதி நகர், சேரனூரிலும் மண்சரிவு ஏற்பட்டது. நடுஹட்டி கிராமத்தில் மின்கம்பி அறுந்து விழுந்து மாடு இறந்தது.

பெட்டட்டி அண்ணா நகரில் 2 வீடுகள் இடிந்து விழுந்தன. கோத்தகிரி இந்திரா நகர் பகுதியில் 3 வீடுகள் இடிந்து விழுந்தது.மேட்டுப்பாளையம்- குன்னூர் மலைப்பாதையில் குரும்பாடி, மரப்பாலம், காந்திபுரம், குன்னூர்-கோத்தகிரி சாலையிலும் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இவற்றை தீயணைப்பு துறையினர் அகற்றினர். மேலூர், குன்னூர் பகுதியில் 9 வீடுகள் இடிந்து

விழுந்தது. தொடர்ந்து பல மணி நேரம் மின் தடை ஏற்பட்டது. மழை மீண்டும் தொடர்வதால் நிலச்சரிவு அபாயம் காணப்படுகிறது. மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 1173.70 மி.மீ மழையளவு பதிவானது.தஞ்சை: தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் நேற்று 5வது நாளாக மழை பெய்தது. தஞ்சையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று பிற்பகல் வரை தொடர்ந்து மழை பெய்தது. அதிகபட்சமாக அணைக்கரை, திருத்துறைபூண்டியில் 64 மி.மீ மழை பதிவாகியுள்ளது. மழையால் கடைமடை பகுதி விவசாய பணி சூடுபிடித்துள்ளது. மேலும் நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்து வருவதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 4 நாட்களாக தொடர்ந்து பெய்தது.

மழைக்கு 8 பேர் பலியாகி உள்ளனர். 13 கால்நடைகள் இறந்துள்ளன. நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை மழை வெளுத்து கட்டியது. நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் புகுந்தது. கீழ்பெரும்பாக்கம் தரைபாலத்தில் மழை நீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை- திருவெண்ணைநல்லூர் சாலையில் உள்ள பிள்ளையார்குப்பம் தரைப்பாலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தரைபாலத்தை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 50 ஆண்டுகளுக்கும் பழமையான இந்த பாலத்தை மேம்பாலமாக கட்டித்தர கிராம மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.மழை நீரில் மூழ்கிய சம்பா பயிர்கள்: திருவாரூர் மாவட்டத்தில் இந்தாண்டு 3 லட்சத்து 37 ஆயிரத்து 500 ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 60 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு, நடவு மூலம் 26,500 ஏக்கர் என ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 560 ஏக்கரில் சம்பா சாகுபடி பணிகள் முடிவுற்றுள்ளது.  கிராமப்புறங்களில் உள்ள கால்வாய்கள் தூர்வாரப்படாததால் ஒரு நாள் பெய்த மழையை கூட தாங்க முடியாமல் நேரடி விதைப்பு சம்பா பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளது.


ரயில் பாதையில் மண்சரிவு

குன்னூர்-ஊட்டி வழித்தடத்தில் வெலிங்டன் உட்பட பல்வேறு இடங்களில் மண்சரிவு ஏற்பட்டது. இதனை ரயில்வே தொழிலாளர்கள் ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றினர். மதியம் 12.30 மணிக்குபின் பாதை சீரானதால் மீண்டும் ரயில் போக்குவரத்து துவங்கியது. மேட்டுப்பாளையம்-குன்னூர் இடையேயான மலை ரயில் நேற்று மெதுவாக இயக்கப்பட்டது.

## ஆயுத பூஜையை முன்னிட்டு கோயம்பேட்டில் குவிந்த பொரி, வாழைக்கன்றுகள்

சென்னை: ஆயுத பூஜைக்கு கோயம்பேடு மார்க்கெட்டுக்கு 25 லாரி பொரி மூட்டைகள் வந்தது. லிட்டர் ரூ. 10க்கு விற்பனை ஆகிறது. ஆயுதபூஜை நாளை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி கோயம்பேடு மார்க்கெட்டுக்கு பொரி மூட்டைகள் வர தொடங்கி உள்ளது. வாணியம்பாடி, வேலூர், ஆம்பூர், ஆற்காடு, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 25 லாரிகளில் பொரி மூட்டைகள் நேற்று வந்தன. கடந்த வருடம் 100 லாரிகளில் பொரி மூட்டை வந்தது. அதில் பாதி அளவுதான் விற்பனையானது. அதனால் இந்த வருடம் குறைந்த அளவு பொரி வந்ததாக வியாபாரிகள் கூறினர். மேலும் தற்போது மழை பெய்து வருகிறது. அதனாலும் பொரி குறைந்த அளவு வந்துள்ளது என்றனர். ஆனாலும் பொரி விலை ஏறவில்லை. கடந்த வருடம் ஒரு லிட்டர் பொரி ரூ. 10க்கு விற்பனை ஆனது. இந்த வருடமும் அதே விலைக்கு விற்கப்படுகிறது. இது தவிர பூஜைக்கு பயன்படுத்தும் வாழை கன்றுகளும் வந்துள்ளன. 2 வாழை கன்றுகள் ரூ. 40க்கும், 4 தோரணம் ரூ. 10க்கும் விற்கப்படுகிறது.

## 3 நாட்களில் முட்டை விலை 45 பைசா குறைந்தது



நாமக்கல்: தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவினர் நாமக்கல் மண்டல விலை நிர்ணய குழு கூட்டம் நாமக்கல்லில் நேற்று நடந்தது. இதில் முட்டை விலை மேலும் 15 காசுகள் குறைத்து ஒரு முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை 270 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. தமிழகத்தில் நவராத்திரி விழா நடந்து வருவதாலும், வட மாநிலங்களில் தசரா விழா கொண்டாடப்படுவதாலும் முட்டை விற்பனை குறைந்துள்ளது. இதனால், முட்டையின் தேக்கத்தை தவிர்க்க விலையை குறைத்து வருகின்றனர். கடந்த 3 நாட்களில் முட்டை விலை 45 காசுகள் குறைக்கப்பட்டுள்ளது. இது குறித்து பண்ணையாளர்கள் கூறியதாவது: பெரும்பாலான வியாபாரிகள் பண்ணையாளர்களிடம் ஒரு முட்டை 250 முதல் 260 காசுக்கு கொள்முதல்

செய்கிறார்கள். இதனால் என்.இ.சி.சி விலைக்கும், வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்கும் வித்தியாசம் அதிகம் உள்ளது. இந்த குழப்பத்தை தடுக்க என்.இ.சி.சி நேற்று 15 காசு விலையை குறை த்து அறிவித்துள்ளது. தற்போது அதிகாரப்பூர்வமாக ஒரு முட்டை விலை 270 காசாக அறிவிக்கப்பட்டாலும் அதை விட குறைவான விலைக்கே முட்டையை விற்பனை யை செய்ய பல பண்ணையாளர்கள் தயாராக உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர். ஒரு கிலோ முட்டைக் கோழி ரூ.52 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.62 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## சம்பா சாகுபடிக்காக 2,691 டன் டிஏபி தஞ்சை வந்தது



தஞ்சை: தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் தற்போது சம்பா சாகுபடி நடவு பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்களை தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு விநியோகிக்க கூட்டுறவுத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் படி, ஆந்திராவின் காக்கிநாடாவில் இருந்து கிரிப்கோ டிஏபி உரம் 2,691 டன் நேற்று 42 ரயில் வேகன்களில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டது. அந்த சரக்கு ரயில் நேற்று தஞ்சை வந்து சேர்ந்தது. இந்த உர மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை, கும்பகோணம், பட்டுக்கோட்டை மற்றும் திருவாரூர், நாகை மாவட்ட பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு இந்த உர மூட்டைகள் வினியோகம் செய்யப்படும்.

## 25 நாட்களாக ஏலம் இல்லை ரூ.150 கோடி ஏலக்காய் தேக்கம்



கூடலூர்: தேனி மாவட்டத்தை ஒட்டியுள்ள கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில், ஒரு லட்சம் ஏக்கருக்கும் மேல் ஏலக்காய் விவசாயம் நடக்கிறது. ஏலத்தோட்ட தொழிலாளர்களில் 80 சதவீதம் பேர் தமிழர்கள். ஆண்டுக்கு 18 ஆயிரம் டன் ஏலக்காய் இப்பகுதியில் உற்பத்தியாகிறது. மத்திய அரசின் ஏல வாரியம் (ஸ்பைசஸ் போர்டு) மூலம் ஏலக்காய் ஏலம் நடக்கிறது. அனுமதி பெற்ற 8 நிறுவனங்கள் புத்தடி மற்றும் போடியில் நடத்தும் கணினி முறை ஏலத்தில் (இ,ஏலம்) ஏலக்காய் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அடிப்படை தொகையில் இருந்து, கிலோவுக்கு 50பைசா வீதம் உயர்த்தி ஏலம் கேட்கும் முறை நடைமுறையில் இருந்து வந்தது. ஏல விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கடந்த மாதம் கேரள முதல்வர் உம்மன்சாண்டி தலைமையில் நடந்த கூட்டத்தில், ஏலத்தொகை வித்தியாசம் கிலோவுக்கு 50 பைசாவில் இருந்து 5 ரூபாயாக உயர்த்த முடிவெடுக்கப்பட்டது. இதை வியாபாரிகள் ஏற்க மறுத்தனர்.இதனால் கடந்த 25நாட்களுக்கும் மேலாக புத்தடி மற்றும் போடி ஏல மையங்களில் ஏலம் நடைபெற வில்லை. சுமார் ரூ.150 கோடி மதிப்புள்ள ஆயிரக்கணக்கான கிலோ ஏலக்காய் தேக்கம் அடைந்ததுள்ளது.இந்நிலையில் ஏல விவசாயிகள் கேரள ஐகோர்ட்டில் தொடர்ந்த வழக்கில், உடனடியாக ஏலம் நடத்த, ஸ்பைசஸ் போர்டுக்கு உத்தரவிடப்பட்டது. நீதிமன்ற உத்தரவால், வரும் செவ்வாய்கிழமை ஏலம் நடத்த ஸ்பைசஸ் போர்டு திட்டமிட்டுள்ளது.